# விவசாய அமைச்சின் மீதான பொதுச் செலவின மீளாய்வுக் குழுவின் அறிக்கை

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

இலங்கை அரசாங்கம்

செப்டம்பர் 2023

## பின்னணி

நிதிக் கட்டுப்பாடுகளை மீண்டும் விதிக்கும் போது பல்வேறு துறைகளில் செலவினங்களின் தரத்தை எவ்வாறு மேம்படுத்துவது என்பதற்கான ஆதாரங்களை வழங்க, நாட்டின் கொள்கை ரீதியான நோக்கங்களுக்கு எதிரான மேலதிக நேரத்திற்கான அரச செலவினங்களின் அளவு சார்ந்த மற்றும் தரமான பகுப்பாய்வு மற்றும் செயல்திறன் குறிகாட்டிகள் அவசியப்படுகின்றன. எனவே, அரச செலவின மதிப்பாய்வு (PERC) என்பது, நிதி அமைச்சும் மற்றைய தொடர்புடைய நிரல் அமைச்சுக்களுக்கும் இடையே துறைசார் முன்னுரிமைகள், நிதி ஒதுக்கீடுகள், செலவுத் திறன், செயல்படுத்தும் இயலளவு மற்றும் விளைவுகளை அளவிடும் விதம் குறித்து ஆக்கப்பூர்வமான உரையாடலை ஊக்குவிக்கவும் உருவாக்கவும் முடியும். இத்தகைய விமர்சன ரீதியான மதிப்பாய்வுகள் அரச நிதி முகாமைத்துவத்தை மேம்படுத்துவதோடு, அரச செலவினங்களின் செயல்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கும் நோக்கத்துடன் அரசாங்கத்தின் சகல மட்டங்களிலும் செயல்திறன் அடிப்படையிலான சீர்திருத்தங்களுக்கு வழிவகுக்கும்.

அந்த முக்கியத்துவத்தை உணர்ந்து, 2023 பெப்ரவரி 06 ஆந் திகதியன்று அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட இலக்கம். 23/0256/604/030 கொண்ட தீர்மானத்தின் அடிப்படையில், பூச்சிய வரவு செலவுத் திட்டத்தின் கொள்கைகளின்படி முறையான மதிப்பாய்வு மூலம் அதன் செலவினங்களை நியாயப்படுத்துதல் மற்றும் அரச செலவினங்களின் எதிர்கால செயல்திறனை அடிப்படையாகக் கொண்டு சீர்திருத்தங்களுக்கான வழிகாட்டுதல்களை வழங்க அமைச்சரவைக்கு பரிந்துரைகள் முன்வைக்க விவசாய அமைச்சிற்கான (MOA)அரச செலவின மீளாய்வுக் குழு நிறுவப்பட்டுள்ளது (பின்னிணைப்பு 1).

PERC க்கு வழங்கப்பட்டுள்ள குறிப்பு விதிமுறைகள் (பின்னிணைப்பு 2 ) இன் மூலம் பின்வரும் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளது:

- தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் அடிப்படைச் செயல்பாடுகள் அமைச்சின் கட்டளைப்படிவத்துக்கு இசைவாக இருப்பதை உறுதி செய்தல்.
- நிரல் அமைச்சின் அனைத்து நிகழ்ச்சித்திட்டங்கள்/ கருத்திட்டங்கள்/துணைத் திட்டங்கள்/செயல்பாடுகளை மதிப்பாய்வு செய்து, அவை அமைச்சின் குறிக்கோள், பணிக்கூற்று மற்றும் தொலைநோக்கை அடைவதற்கு எவ்வாறு பங்களிக்கின்றன என்பதைக் கண்டறிதல்.
- MOA இன் கீழ் வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் தற்போதைய செலவின திட்டங்களின் இரட்டிப்பு, வீண்விரயம் மற்றும் சிறிய திட்டங்கள் அல்லது செலவுகளை கண்டறிதல்.
- தேவையை நியாயப்படுத்துவதற்கான முன்னுரிமை திட்டங்களை அடையாளம் காணல்.
- வளங்களின் உகந்த பயன்பாட்டை உறுதி செய்வதற்காக வினைத்திறனான மற்றும் பயனுறுதி வாய்ந்த நடைமுறைகள் மற்றும் செலவுக்கான காரணிகளை அடையாளம் காணல்.
- MOA தனது கடமைகளை நிறைவேற்றவும்,"சரியான செலவு – சரியானநேரத்துக்கு" என்ற முறையில் அரசாங்கம் விரும்பிய இலக்குகளை அடைய உதவுகின்ற சீர்திருத்தங்கள் மற்றும் கட்டமைப்புகளை முன்மொழிதல்.

**<u>அரச செலவின மதிப்பாய்வுக் குழு மற்றும் விவசாய அமைச்சிக்கான (PERC – MOA) கட்டமைப்பு</u>**

PERC - MOA குழு, இணங்கியதாக வரைவிடப்பட்ட ஆவணத்திற்கும் நடைமுறைகளுக்கும் ( இணைப்பு 3) இன் படி விவசாய அமைச்சின் மற்றும் அமைச்சின் விடயப்பரப்பு எல்லைக்குட்பட்ட நிரல் திணைங்களங்கள் / நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுடன் பல சந்திப்புக்கள் நடாத்தப்பட்டன. தேசிய திட்டமிடல், தேசிய வரவு செலவுத் திட்டம் மற்றும் திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு ஆகிய திணைக்களங்களில் உள்ள உத்தியோகத்தர்களும் இச் சந்திப்பில் பங்கேற்று, உரிமைகள் கட்டளைகள், தற்போதைய பணியின் விடயப் பரப்பு, எதிர்கால பொறுப்புகள் மற்றும் சவால்கள், தேவைப்படும் மேம்படுத்தல்களுக்காக MOA-இன் விடயப் பரப்பின் கீழ் உள்ள சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் / நிறுவனங்களினால் வழங்கப்பட்ட முன்வைப்புக்களை ஆய்வு செய்வதற்காக விமர்சன ரீதியான அவதானங்கள் மற்றும் தெளிவுகள் வழங்கப்பட்டுள்ளது.

**<u>அறிமுகம்</u>**

தேசிய பொருளாதாரத்திற்கு கணிசமான பங்களிப்பை வழங்குவதனைப்போன்றே உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விவசாயத் துறையானது இலங்கையின் முக்கிய பொருளாதார சக்தியாக மாறியுள்ளது. மேலும், பெரும்பாலான கிராமப்புறத்தவர்களின் வாழ்வாதாரமாக விவசாயம் உள்ளது மற்றும் கிராமப்புற வறுமையை ஒழிப்பதில் பெரும் பங்கினை வகிக்கிறது. 2022 இல் இலங்கையின் பொருளாதாரம் 7.8% இனால் சுருங்கியதோடு, சமீபத்திய பொருளாதார வீழ்ச்சியின் விளைவாக, விவசாயத் துறையும் 4.6% சுருங்கியது, ஆனால் மொத்த தேசிய உற்பத்தியில் 8.7%ஆக பங்களித்துள்ளது. 1948 இல் சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இந்தத் துறைக்கு நன்கு அங்கீகாரம் காணப்பட்டதோடு, மேலும் தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் எப்போதும் விவசாயத் துறைக்கு ஒதுக்கிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் தொடர்ந்தும் இருந்தே வந்துள்ளார்கள்.

1.8 மில்லியன் விவசாய குடும்பங்களைப் போன்ற விவசாய உணவு மதிப்பு சங்கிலியில் பங்குதாரர்களுக்கு அமைச்சின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. விவசாய அமைச்சுக்குரிய கொள்கைகளைத் தயாரித்தல், ஒழுங்குமுறை மற்றும் அவசியப்படும் வழிகாட்டுதல்களை தயாரித்தல் மற்றும் துறையின் நிலையான வளர்ச்சிக்காக அதன் மூன்று முக்கிய வழிமுறைகளான விவசாயத் திணைக்களம் (DOA), கமநல அபிவிருத்தித் திணைக்களம் (DAD) மற்றும் விலங்குகள் உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் (DAPH) ஆகியவற்றுடன் இணைந்து அதன் கட்டாய செயல்பாடுகளைச் செய்வதற்கும் முன்னுரிமைகளை வழங்கவும் பொறுப்பாக உள்ளார்கள். அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளபடி, இந்த அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டுள்ள முக்கிய பணிகளைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

1. விவசாயம், கால்நடை மற்றும் பால் உற்பத்தி மற்றும் உற்பத்தியை மேம்படுத்துதல்
2. அறுவடைக்கு முந்தைய மற்றும் பிந்தைய இழப்புகளைக் குறைத்தல்
3. இழப்புச் சாத்தியங்கள்,அதிர்ச்சிகள், அச்சுறுத்தல்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகளை முகாமை செய்தல்
4. மதிப்பு சங்கிலி மற்றும் போட்டித்தன்மையை வலுப்படுத்துதல்
5. செயற்திட்டச் சேவைகளை விரிவாக்கம்செய்தல்
6. விதைகளைச் சான்றுப்படுத்தல் மற்றும் தாவர பாதுகாப்பு
7. விவாசாயத் துறையை மேம்படுத்துவதற்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்

வழங்கப்பட்டுள்ள பணிகளைச் செய்வதற்காக தேசிய அளவில் கிட்டத்தட்ட 28,000பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். முக்கியமாக மாகாண சபைகளின் கீழ் மாகாண மட்டத்தில் செயற்படுத்தும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள விடயமாக காணப்படும் விவசாயத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட மாகாணப்பணியாளர்கள் இந்த எண்ணிக்கையில் உள்ளடக்கப்பட மாட்டார்கள், இந்த பணியாளர்களின் எண்ணிக்கை மாகாண மட்ட பணியாளர்களுள் உள்ளடக்கப்படுவதில்லை. 124 மெகா, பெரிய மற்றும் நடுத்தர அளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்தல், விவசாயம் சார்ந்த நவீனமயமாக்கல், உணவு முறைகளை வலுப்படுத்தல் மற்றும் விவசாய மதிப்புச் சங்கிலியைவலுப்படுத்தல், பண ரீதியான மானியங்கள் மற்றும் உதவுத்தொகைகள் மூலம் உறுதிப்படுத்தல், சாத்தியக்கூறுளை கட்டியெழுப்புதல், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் விவசாயிகளை வலுப்படுத்தல் போன்ற திட்டங்களின் ஊடாக அரசாங்கம் 2015 ஆம் ஆண்டு முதல் சுமார் 294 பில்லியன் இலங்கை ரூபாவை முதலீடு செய்துள்ளது.

இந்த முதலீட்டின் மூலம், ரூபா. 91 பில்லியன் தொகை, பிரதானமாக பல்தரப்பு நன்கொடையாளர்களிடமிருந்து பெற்ற கடன்களாகும் என்பதோடு, அவை வட்டி மற்றும் அநேகமான சந்தர்ப்பங்களில் தாமதமானதன் காரணமாக குவிந்துள்ள காலாவதியான கட்டணங்களுடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.மேலும், இரசாயன உரங்கள் (உதா: யூரியா, முக்கலவையுடன் கூடிய சூப்பர் பொஸ்பேட் (TSP), மியூரேட் ஒப் பொட்டாசியம் (MOP) போன்ற விவசாய உள்ளீடுகள் அதிக அளவிலும் மற்றும் செயற்திட்டச்சேவைகளுடன் உதவுத்தொகைகளை வழங்குவதற்காக சர்வதேச அபிவிருத்தி பங்காளிகளின் ஆதரவு கடந்த காலங்களில் கிடைக்கப்பெற்றுள்ளது.

**PERC பகுப்பாய்வு**

கூட்ட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்ட வரைவிடப்பட்ட ஆவணங்களின்படி, PERC குழு MOA வின்எதிர்பார்க்கப்படும் முக்கிய பலங்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. அதன்படி, மற்ற துறைகளுடன் ஒப்பிடுகையில் விவசாயத் துறைக்கு ஆண்டுதோறும் விகிதாசார அடிப்படையில் வரவு செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. குறிப்பாக அறிவுடன் கூடிய கவனத்திற் கொள்ளத்தக்க மனித வளத்துடன் கூடிய பணியாளர்களைக் கொண்ட அதிக எண்ணிக்கையினர் நாடு பூராகவும் பரந்து காணப்படுகின்றனர். விவசாய விஸ்தரிப்புச் சேவைகளை வழங்குவதற்காக வலுவான பொறிமுறையொன்றினை நிறுவுதல்; விடயத்துடன் தொடர்புடைய மைய மற்றும் பரவலாக்கப்பட்ட மட்டங்களில் சமனாக அரச நிர்வாகம் பொறிமுறையாக்கப்படுகிறது; ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (R&D) இற்கான விகிதாசாரப்படி உயர் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளதோடு, அமைச்சின் அடிப்படைச் செயற்பாடுகளை நிறைவேற்றும் வகையில், அமைச்சுக்குச் சொந்தமான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி துணை நிறுவன அமைப்பு மற்றும் பாரிய அளவிலான வெளிநாட்டு நிதித் திட்டங்களுடன் இணைந்து செயற்படுவதோடு, இறுதியாக, இத்துறைக்கு தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அரசு உடனடித் தலையீடுகளை வழங்கிச் செயற்படுவதும் முன்கூட்டியே இடம்பெறுகின்றது.

---

1. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் (2023): ஆண்டறிக்கை 2022. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை

http://www.statistics.gov.lk/NationalAccounts/StaticalInformation/Reports/2022_Annual_Provisional

**(1) தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் அடிப்படைச் செயற்பாடுகள் அமைச்சின் கட்டளைப் பத்திரத்துக்கு இசைவானதா என்பதை தீர்மானித்தல்;**

வர்த்தமானி அறிவித்தல் மூலம் மீள நிறுவப்பட்ட கட்டளைப் பத்திரத்தின் படி விவசாயத்தை புத்துயிர் பெறச் செய்வதன் மூலம் தன்னிறைவு பெறுவதற்கான வசதியை வழங்கும் பொருட்டு, விவசாய அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு உற்பத்தியின் மூலம் உணவுப் பாதுகாப்பை அடையவும், உணவு இறக்குமதிச் செலவுகளைக் குறைக்கும் நோக்கத்துடனும் உள்நாட்டு உணவு உற்பத்தியை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, உணவு மற்றும் உணவுப் பயிர்கள் மற்றும் கால்நடை வள உற்பத்தியின் இருப்பை உறுதி செய்வது கட்டாயமாகும்.

குழுவானது விவசாய அமைச்சின் (MoA) தொலைநோக்கினை மதிப்பாய்வு செய்துள்ளதோடு, உணவுப் பாதுகாப்பு மற்றும் தேசிய செழிப்பு தொடர்பிலான கொள்கை ரீதியான இலக்குகளை அடைவதற்கான அர்ப்பணிப்பை இது வெளிப்படுத்துகிறது என்பது குழுவின் கருத்தாகும்.

***உணவு பாதுகாப்பு மற்றும் தேசிய வினைத்திறன், பயனுறுதி மற்றும் வலுவான விவசாயத் துறையை கட்டியெழுப்பல்***

எனவே தற்போதுள்ள தொலைநோக்கை எந்த மாற்றமும் இன்றி ஏற்க குழு ஒப்புக்கொள்கிறது. எவ்வாறாயினும், கைச்சாத்திடப்பட்ட கொள்கைக்கான இலக்குகள் 12 உடன் தயாரிக்கப்பட்டுள்ள தேசிய விவசாய கொள்கை வரைவு தொலைநோக்குடன் இணைக்கப்பட்டிருந்தாலும், கால்நடைத் துறை உள்ளடக்கப்படாததால், கொள்கை உள்ளடக்கத்தின் மூலம் அமைச்சின் அதிகாரம் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்று குழு கருதுகிறது.

குழு பணிக்கூற்றை மதிப்பாய்வு செய்துள்ளதோடு, அதன் தொலைநோக்கினை அடைந்து கொள்வதற்கான மூலோபாயத் திட்டங்களை நோக்கியதாக போதுமானளவு பிரதிபலிக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

***இயற்கை வளங்களின் பேண்தகு முகாமைத்துவம் மூலம் பொதுவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் வணிக சார் நோக்குடன் உலகளாவிய ரீதியில் போட்டித் தன்மையுடன் கூடிய தயாரிப்புகளை உற்பத்தி செய்யும் தொழில் முனைவோரைக் கொண்ட விவசாயத்தை அடைந்து கொள்ளல்.***

தொலைநோக்குப் பார்வையின் கீழ் இலக்குகளை அடைவதில் உள்ள சவால்களை எதிர்கொள்வதில் பணிக்கூற்று அறிக்கையுடன் இணங்கவில்லை என்பதால், தொலைநோக்கை அடைவதற்காக அமைச்சினால் முன்வைக்கப்படும் பணிகளுக்கு ஏற்ப பொருள் கோடப்பட்டுள்ள முக்கிய **மூலோபாயங்கள் / அதிகாரத் துறைகளுடன்** பணிக்கூற்றினை மறுஆய்வு செய்ய குழு முன்மொழிகிறது.

அமைச்சினால் வழங்கப்படும் முடிவான வெளியீடுகளை வழங்க உடன்பட்டுள்ள மைற்கல்லின் படி (அ) திட்டம் தொடர்பில், மற்றும் (ஆ) வருடாந்த திட்டத்துடன் சம்பந்தப்பட்டவை என இரண்டு வகையாக பிரிக்கலாம். வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்திறன் திட்டத்தின் படி அமைச்சு செயல்படுத்துகின்ற, ஆனால் செலவு உருப்படிகளின்படி முன்னேற்றம் காலாண்டுக்கு காலாண்டு மதிப்பாய்வு செய்யப்படுகிறது. ஒவ்வொரு மெகா-அளவிலான திட்டத்திற்கும்

தனி நபர் பெறுபேற்பதற்கான கட்டமைப்பைக் கொண்டிருந்தாலும், அவற்றின் செயல்திறன் அவர்களின் செயல்திறன் குறிகாட்டிகளின் (KPI) அடிப்படையில் மதிப்பாய்வு செய்யப்படுவதில்லை, எனவே எந்தவொரு பெரிய சாதனையையும் காண முடியாது. சில வருடாந்த வேலைத்திட்டங்களைப் பொறுத்தமட்டில், அமைச்சின் பங்கு புற பிரதேச செயலகங்களுக்கு நிதியை மாற்றுவது மட்டுமே, எனவே அந்த நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றத்தை வருட இறுதி வரை கண்காணிக்க முடியாதுள்ளது. இந்த நடைமுறைகள் காரணமாக திட்டமிட்ட முன்னேற்றத்தை வழங்குவதில் தொடர்ச்சியான தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாக குழு அவதானித்துள்ளது.

எனவே, அமைச்சின் முக்கிய விநியோகங்களுக்கான மைல்கல்லுடன் முக்கிய செயல்திறன் குறிகாட்டி உட்பட ஒரு செயல்திறன் கட்டமைப்பு குழுவால் முன்மொழியப்பட்டுள்ளதோடு, அதன்படி தயாரிக்கப்பட்டுள்ளது.

**(2) நிரல் அமைச்சின் அனைத்து திட்டங்கள்/செயற்திட்டங்கள்/துணை திட்டங்கள்/செயல்பாடுகளை மதிப்பாய்வு செய்து, அவை ஒவ்வொன்றும் அமைச்சின் குறிக்கோள்கள், பணிக்கூற்று மற்றும் தொலைநோக்கினை அடைவதற்கு எவ்வாறு பங்களிக்கின்றன என்பதைக் கண்டறிதல்.**

2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, அரசாங்கம் MOA மற்றும் அதன் திணைக்களங்களுக்கு உத்தேசமாக 115 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது, இது மொத்த வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் 2.8% ஆகும். MOA வரவு செலவுத் திட்ட மூலதன முதலீட்டை விட தொழில்நுட்ப செயல்பாடுகளின் பால் அதிக கவனத்தை செலுத்தியுள்ளது. ஒட்டுமொத்த வரவுசெலவுத் திட்டத்தில் சுமார் 70% மாத்திரம் மீண்டுவரும் தன்மையுடைய செயல்பாடுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதோடுமுக்கியப் பகுதியான உரச் செலவுகளைத் தாங்குவதற்கு செலவிடப்படுகிறது. மேலும், விதைகளைப் பகிர்ந்தளித்தல், விவசாய பூச்சி கொல்லிகள், கருவிகள் போன்ற மீண்டுவரும் இயல்புடைய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த பிரதேச அளவில் பாரிய அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மூலதன வரவு செலவுத் திட்டத்தால் விவசாயிகளுக்கு கணிசமான அளவு மானியங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1: விவசாய அமைச்சுக்கும் அதன் கீழ் இயங்கும் திணைக்களங்களுக்கும் 2023 ஆம் ஆண்டுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம்**

| நிறுவனம் | அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் 2023 (LKR' 000) | | | மூலதனம்: மீண்டுவரும் வீதம் |
|---|---|---|---|---|
| | மீண்டுவரும் | மூலதனம் | மொத்தம் | |
| விவசாய அமைச்சு | 58,577,136 | 22,141,500 | 80,718,636 | 1:2.6 |
| கமநல அபிவிருத்தி திணைக்களம் | 9,659,750 | 4,520,000 | 14,179,750 | 1:2.1 |
| விவசாயத் திணைக்களம் | 6,319,014 | 3,380,500 | 9,699,514 | 1:1.8 |
| கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் | 802,100 | 867,000 | 1,669,100 | 1:0.9 |
| ஏனைய நிறுவனங்கள் | 5,642,000 | 3,466,000 | 9,108,000 | 1:1.6 |
| **மொத்தம்** | **81,000,000** | **34,370,000** | **115,370,000** | **1:2.3** |

PERC இன் TOR (குறிப்பு விதிமுறைகள்) இல் குறிப்பிடப்பட்டுள்ள 12 பணிகளின் அடிப்படையில், குழுவினால் மீளாய்வு முறையொன்றை நிறுவப்பட்டுள்ளது (இணைப்பு 5). MOA இன் வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் ஐந்து மெகா அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் ஒரு மெகா மீண்டுவரும் நிகழ்ச்சித்திட்டம் உட்பட 38 முக்கிய செலவின உருப்படிகள் குழுவினால் அந்தந்த திட்டப் பணிப்பாளர்களுக்கும் நிரல் திணைக்களங்கள் / நிறுவனங்களின் தலைவர்களுடன் மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. அட்டவணை 2 இல் அடையாளம் காணப்பட்ட எட்டு முக்கிய பகுதிகள், இயல்புகள் மற்றும் பணியின் விடயப் பரப்பில் உள்ள ஒற்றுமைகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளதோடு, அவற்றையும் மதிப்பாய்வில் பரிசீலிக்கப்பட்டன. அதிகாரத் துறை ஊடாக MOA இன் தொலைநோக்கினை அடைந்து கொள்வதற்காக ஒவ்வொரு கூறுகளின் பங்களிப்பு மூலம் மேலும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. மேலும், ஒட்டுமொத்த MOA வரவுசெலவுத் திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு கூறுகளின் முக்கியத்துவமும் புரிந்து கொள்ளப்பட்டது. தொலைநோக்கு, நிலவுகின்ற சவால்கள் மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில்எழுகின்ற சிக்கலான நிலைமைகள், சமுதாயத்திற்கு கிடைக்கும் நலன்கள், விளைவுகள் - கிடைக்கப்பெறும் காலப்பகுதி, சந்தையில் நிலவும் சாத்தியக்கூறு, இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மற்றும் அரசாங்க முன்னுரிமைகள் போன்ற நோக்கங்களை அடைய சமீபத்திய கொள்கை மாற்றங்கள் / தொலைநோக்கின் பால் விசேட கவனம் செலுத்தி குழுவினால் ஒவ்வொரு திட்டத்திற்கும் தனது அவதானங்களை நிறுவியுள்ளது. இந்த பகுப்பாய்வு மூலம் அடையாளம் காணப்பட்ட ஒவ்வொரு கூறுகளின் கீழும் சாத்தியமான சேமிப்புகள் அட்டவணை 2 இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 2: விவசாயம் அமைச்சின் கீழ் உள்ள செயற்திட்ட படை புலங்களின் சுருக்கப் பகுப்பாய்வு**

| கூறுகள் | பிரதான செயற்பாடுகளுடனான தொடர்பு | 2023ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் பகுதி | சாத்தியமான சேமிப்புகள் (ரூபா. மில்லியன்) |
|---|---|---|---|
| பசளை விநியோகம் | 1 | 49% | 5,309 |
| மெகா அபிவிருத்திச் செயற்திட்டங்கள் | 7 ,4 ,3 ,2 ,1 | 16% | - |
| விதைகளை உறுதிப்படுத்தல் மற்றும் தாவர பாதுகாப்பு | 05 | 2% | 500 |
| உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டம் | 6 ,5 ,4 ,3 ,2 ,1 | 4.5% | 50 |
| கால்நடை அபிவிருத்தி மற்றும் பால் உற்பத்தி | 1 | 0.3% | 191.5 |
| ஓய்வூதியம் மற்றும் காப்புறுதி | 3 | 5% | - |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 5 ,2 ,1 | 1% | 43 |
| நிறுவன அபிவிருத்தி மற்றும் நிர்வாகம் | 0 | 20.5% | 280 |

### i. பசளை விநியோகம்

நாட்டின் வருடாந்த மீண்டுவரும் வரவு செலவுத் திட்டத்திற்கு பெரும் நிதி அழுத்தத்தை ஏற்படுத்தினாலும், உணவுப் பாதுகாப்பை அடைவதில் விவசாய உற்பத்தித்திறனை மேம்படுத்துவதில் உர விநியோகம் முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே, (அ) மானியங்களை வழங்குதல், (ஆ) ஆராய்ச்சி வசதிகளை மேம்படுத்துதல், (இ) தரவுத்தளத்தை விருத்தி செய்தல் மற்றும் (ஈ) பசளைக் களஞ்சியத்தை மேம்படுத்துதல் மற்றும் (உ) ஆகிய நோக்கங்களுக்காக

MOH இனால் உரத் திட்டத்துடன் தொடர்புடைய வரவு செலவுத் திட்டத்தில் மூல உருப்படிகள் ஐந்தினை ஒதுக்கியுள்ளது. 2023 தேசிய வரவு செலவுத் திட்டத்தில் MOA க்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்த ஏற்பாடுகளில் ஏறக்குறைய பாதியளவு உர மானியத்திற்கான ஒதுக்கீடு பாரிய அளவில் (56 பில்லியன் இலங்கை ரூபாயில்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டின் கணிசமான தொகை (ரூபா. 43.6 பில்லியன்) முன் பொறுப்புக்களுக்கானது என்பது குறிப்பிடத்தக்கது. மானியச் செலவில் கணிசமான அளவு, அதாவது ஒட்டுமொத்த உர மானிய ஒதுக்கீட்டில் தோராயமாக 1/5, அதன் செயற்பாட்டுச் செலவுகளுக்காகவே என்று குழு குறிப்பிட்டுள்ளது. நிலைபேறான விவசாய முறைகளை ஊக்குவிப்பதற்காக, மேம்படுத்துகைகள் மற்றும்மிகச் சிறந்த வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதனை நோக்கமாகக் கொண்டு, உர மானிய உத்திகள் மாறியிருந்தாலும், பயிர் உற்பத்தியில் உரங்களின் பயன்பாட்டை நியாயப்படுத்த உதவுகின்ற மண் பரிசோதனை முடிவுகளுடன் இது மூலோபாய ரீதியாக முரணாக உள்ளது.

### ii. பாரிய அளவிலான முதலீட்டுச் செயற்திட்டங்கள்

வேலைத்திட்டங்களுக்கு உதவுதல் மற்றும் உதவுத்தொகை, கடன், பொருட்கள், உபகரணங்கள் , ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, மதிப்பீட்டுச் சங்கிலியின் விருத்தி, பயிற்சி மற்றும் பொதுவான விவசாய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் என்பன MOA இன் கீழ் செயல்படுத்தப்படும் ஐந்து (05)வெளிநாட்டு நிதியுதவி மெகா அபிவிருத்தி திட்டங்கள் MOA இடம் காணப்படுகின்றது.தோராயமாக, 2023 ஆம் ஆண்டின் மூலதன வரவு செலவுத் திட்டத்தில் 60% ஆனது இந்தத் திட்டங்களுக்காக ஒதுக்கப்படுகின்றது. இந்தத் திட்டங்கள் அனைத்துக்கும் நிதியுதவி வழங்கப்படுவது கடனுதவியினால்என்பதோடு, 333 ஊழியர் குழாத்தினரைக் கொண்டுள்ள தனியானதொரு திட்ட முகாமைத்துவ அலகுகின் (PMUs) கீழ் இயங்குகின்றன. மேலும், இந்த ஐந்து திட்டங்களின் மொத்த முதலீட்டில் சுமார் 6% மாத்திரம், அவற்றின் செயல்பாட்டு மற்றும் ஊழியர்களின் செலவுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்று பகுப்பாய்வு வெளிப்படுத்தியுள்ளது. குழுவானது இந்த செயற்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களை அவர்களின் திட்ட அபிவிருத்தி நோக்கங்களுக்கு இணங்கியதாக மதிப்பாய்வு செய்துள்ளதோடு, அவற்றில் நிதி ஒதுக்கீட்டு விநியோகங்கள், தொடர்புடைய ஒருங்கிணைப்புகள், காலத்திற்கேற்ற தன்மை, பயனாளிகள், ஆரம்ப மற்றும் இதுவரையிலான முன்னேற்றம், மதிப்பீடுகளை நியாயப்படுத்தல் போன்றவற்றைப் பற்றியும் கருத்து தெரிவிக்கப்பட்டது. இந்த ஐந்து திட்டங்களும், அவற்றிற்கு உரிய கால அட்டவணைகளுக்குப் பின்னால் செயல்படுத்தப்பட்டு கால நீட்டிப்புகளைப் பெற்றுள்ளதோடு, அவற்றினால் தேசிய வரவு செலவுத் திட்டத்திற்கு மேலதிக செலவீனங்கள் ஏற்பட்டுள்ளன.

### iii. விதைகளை உறுதிப்படுத்தல் மற்றும் தாவர பாதுகாப்பு

ஒரு வெற்றிகரமான பயிருக்கு விதைச் சான்றளிப்பு அடிப்படையானது மற்றும் ஒரு முக்கியமான இழப்புச் சாத்தியங்களுக்கான முகாமைத்துவக்கருவியாகவும் காணப்படுகின்றது. விதைச் சான்றளிக்கும் செயல்முறையின் மூலம் விதைகளைப் பராமரித்தல் மற்றும் உற்பத்தி செய்தல் மற்றும் விதைகளை பொதுமக்களுக்கு விளம்பரப்படுத்தல் ஆகியவை இலங்கையில் பயிரிடப்படும் பயிர்வகைகளின் மரபணு அடையாளத்தையும் மரபணுத் தூய்மையையும் உறுதி செய்யும். சான்றளிக்கப்பட்ட விதைகளைப் பயன்படுத்துவதோடு, அதனுடன் சேர்த்து விவசாயப் பயிர்களின் சேதங்களைக் குறைக்க சுற்றுச்சூழலுக்கு உகந்த, பொருளாதார ரீதியில் பயனுறுதி மிக்க மற்றும் பயனுள்ள பூச்சி முகாமைத்துவ உத்திகளைக் கடைபிடிப்பது முக்கியம் என்பதோடு, அதன் மூலம் பயிர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்க முடியும். இலங்கையில் மேம்படுத்தப்பட்ட விதைச் சான்றளிப்புத் திட்டத்தின் அவசியத்தை உணர்ந்து, 2022 ஆம் ஆண்டுடன் ( ரூபா. 780 மில்லியன்) ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டின் தேசிய வரவு செலவுத்

திட்டத்தில் (DOA க்கு ரூபா. 2,000 மில்லியன்) நிதி ஏற்பாடுகள் ஒதுக்கீயிருப்பதானது ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பாகக் காணப்படுகிறது.

விவசாயத்திற்குத் தேவையான அளவிற்கு தரமான விதைகள் மற்றும் நடவுப் பொருட்களை வழங்குவதே இந்த வரவு செலவுத் திட்ட உருப்படியின் நோக்கமாகும். மீள்தன்மை மற்றும் முன்னேற்றகரமான விவசாயத் துறையை வளர்ப்பதில் விதைச் சான்றளிப்பு மற்றும் தாவரப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து, MOA ஆனது விவசாய விதைகள் மற்றும் நடவுப் பொருட்களின் தரம், பற்றுதிறன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதில் உறுதியாக உள்ளது. தேசிய உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துதல், பயிர் உற்பத்தித்திறனை அதிகரித்தல் மற்றும் பல்லுயிர்ப் பெருக்கத்தைப் பாதுகாப்பதற்கான தொலைநோக்குடன், வலுவான விதைச் சான்றளிப்பு மற்றும் தாவரப் பாதுகாப்புத் திட்டங்களை செயலில் நடைமுறைப்படுத்துவதை உறுதிசெய்வது MOA ஆனது மிக முக்கியமானது. எனவே, இலக்கு பற்றிய தெளிவான ஒட்டுமொத்த கருத்தைப் பெறுவதற்காக தரமான விதைகள் மற்றும் நடவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான நடுத்தர காலத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும், வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்வதற்கு முன்னர் மூலதனங்களின் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்வதற்காக இலங்கையில் சான்றளிக்கப்பட்ட முளைவிதை நெல் மற்றும் இதர சான்றளிக்கப்பட்ட விதைகளின் உற்பத்தி மற்றும் பாவனையில் வருடா வருடம் அதிகரித்ததன் காரணமாக கடந்த ஐந்தாண்டுகளில் கிட்டிய சாதனைகள் பற்றிய அறிக்கையைப் பெறுவது அவசியமான காரணியாகும்.

### iv. உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டம்

எல்லா சந்தர்ப்பங்களிலும், சுறுசுறுப்பான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு அவர்களின் உணவுத் தேவைகளையும், உணவு விருப்பங்களையும் பூர்த்தி செய்ய போதுமானளவு, பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தினைக் கொண்ட உணவை அனைத்து மக்களுக்கும் போதுமானபௌதீக மற்றும் பொருளாதார அணுகல் இருந்தால் மட்டுமே தேசிய அளவில் உணவுப் பாதுகாப்பை அடைய முடியும்.தேசிய செழிப்பு மற்றும் நல்வாழ்வுக்கான அடித்தளமாக உணவுப் பாதுகாப்பின் திட்டமான முக்கியத்துவத்தை கண்டறிந்து, MOA ஆனது அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான, ஊட்டச்சத்துக்கள் கொண்ட மற்றும்கொள்வனவு செய்ய முடியுமான உணவுகளின் நிலையான தன்மை மற்றும் போதுமானளவு வழங்கலை உறுதி செய்வதற்காக ஒரு வலுவான மற்றும் விரிவான உணவுப் பாதுகாப்பு திட்டத்தை செயல்படுத்துகிறது.அதுமட்டுமன்றி, உணவு பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்வதற்காக ஒட்டுமொத்த மற்றும் பங்கேற்பு அணுகுமுறைகளை மேம்படுத்துவதற்காக விவசாயிகள், சிவில் சமூக அமைப்புகள், தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் சர்வதேச பங்காளிகள் உள்ளிட்ட பல்வேறு பங்குதாரர்களுடன் MOA நெருக்கமாகவும் ஒத்துழைப்புடனும் செயற்பட்டு வருகிறது. கூட்டுப்பங்காண்மைகளை ஊக்குவித்தல் மற்றும் அறிவுப் பரிமாற்றங்கள் மூலம், நிலையான உணவுப் பாதுகாப்பு இலக்குகளை அடைவதற்கு கூட்டு நிபுணத்துவம் மற்றும் வளங்களைப் பயன்படுத்த MOA முயல்கிறது.

அதன்படி, (அ) விசேட உணவுப் பாதுகாப்புத் திட்டத்திற்காக (MOA க்கு ரூபா. 2,000 மில்லியன்), (ஆ) சிறு நீர்ப்பாசன அமைப்புக்கள் மற்றும் தரிசு வயல் நிலங்களுக்கு (DAD க்கு ரூபா. 3,000 மில்லியன்), (இ) துணை பயிர்ச் செய்கைத் திட்டம் மற்றும் பயிர் உற்பத்திக்கு (ரூபா. MOA 100 மில்லியன்), (ஈ) விவசாயத் தொழிலில் இளைஞர்களைத் தக்கவைத்தல் மற்றும் விவசாயத்தில் இளைஞர்களை பிரதானப்படுத்துதல். தேசிய வரவு செலவுத் திட்டத்தில் இருந்து நான்கு கூறுகளின் கீழ் (MOA க்கு ரூபா.120 மில்லியன்) மொத்தம் ரூபா. 5,220 மில்லியன் 2023 இல் ஒதுக்கப்பட்டுள்ளது.முன்மொழியப்பட்ட செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை அடையாளம்

கண்டு, இந்த திட்டக் கூறுகளுக்கான பயனாளிகளை தேர்ந்தெடுப்பதற்கான அளவுகோல்கள் தெளிவாக வரையறுக்கப்படவில்லை என்றும், இந்த செலவின உறுப்படிகள் மூலதனமா மீண்டுவருமா என்பது பற்றி நிதி ஒதுக்கீடுகளில் தெளிவான வரையறை செய்யப்படவில்லை என்றும் குழு குறிப்பிட்டுள்ளது. இத்தகைய குறைபாட்டை அடுத்த ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் நிவர்த்தி செய்யப்படல் வேண்டும். மேலும், இத்திட்டத்தின் கீழ் உள்ள செலவினங்கள் உறுப்படிகளின் திட்டத்தின் குறிக்கோள்/இலக்குகளுடன் இணைந்திருப்பதை உறுதிசெய்து, அவற்றிற்குத் தேவையான ஒப்புதல்களைப் பெறுவது அவசியமாகும்.

### v. கால்நடை அபிவிருத்தி மற்றும் பால் உற்பத்தி

விவசாயத் துறையை வலுப்படுத்துவதிலும் கிராமப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதிலும் கால்நடை அபிவிருத்தி மற்றும் பால் உற்பத்தியின் முக்கிய பங்கை கண்டறிந்து, MOA இந்த துறையினுள் விரிவான மற்றும் நிலையான திட்டத்தை செயல்படுத்த உறுதிபூண்டுள்ளது. உயர்தர பால் பொருட்களை ஊக்குவித்தல் மற்றும் விவசாயிகளின் சமூக-பொருளாதார நல்வாழ்வை கட்டியெழுப்பல் உள்ளிட்ட கால்நடைகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நோக்கில் வளமான மற்றும் தகவமைப்பு கால்நடைத் தொழிலை உருவாக்க MOA முயற்சிக்கிறது.

அதன்படி, (அ) திரவ பால் நுகர்வுக்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்தல் மற்றும் ஊக்குவித்தல் (MOA க்கு ரூபா. 25 மில்லியன்), (ஆ) கால்நடை இனவிருத்தித் திட்டம் (DAPH க்கு ரூபா. 200 மில்லியன்) (இ) குண்டசாலையில் செயற்கை கருவூட்டல் (AI) மையத்தின் மேம்படுத்தப்பட்ட இனவிருத்தி உற்பத்திகளின் ஊடாக திரவப் பால் உற்பத்தியை அதிகரித்தல் (DAPH இற்காக ரூபா. 100 மில்லியன்), (ஈ) விலங்கு இனப்பெருக்க வளர்ப்பு பண்ணைகளை நிறுவுதல் (MOH இற்காக ரூபா. 50 மில்லியன்), (உ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அபிவிருத்தி கால்நடை (MOH ரூபா. 250 மில்லியன்), (ஊ) ஆடு இனவிருத்தி (MOA க்கு LKR 150 மில்லியன்), (எ) கால் மற்றும் வாய் நோய்க்கான உள்நாட்டில் தடுப்பூசிகளின் உற்பத்தி (DAPH க்கு LKR 126.5 மில்லியன்), மற்றும் (ஏ) உயர்தர பசுக் கன்றுகள் (DAPH இற்கு ரூபா. 71 மில்லியன்) ஆகிய எட்டு (08) செயற்திட்டங்களின் கீழ் 2023 ஆம் ஆண்டிற்கு மொத்தம் 971 ரூபாய் ஆன நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.முன்மொழியப்பட்ட நடவடிக்கைகளில் முக்கியத்துவம் இருந்தபோதிலும், சில திட்டங்களை செயல்படுத்துவதற்கான திட்டம் ஏதும் இல்லை என்றும், முதலீடுகள் மூலம் சமூகத்திற்கு அதிகரிக்கும் நன்மைகளைக் காட்டவில்லை என்றும் குழு குறிப்பிட்டுள்ளது. மேலும், 2023 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாடுகள் முந்தைய ஆண்டின் பொறுப்புக்களுக்கு ஆதரவு வழங்கவும் பலவீனமான முன்னேற்றங்கள் காரணமாக அமைந்துள்ளதாலும் அண்மைக்கால விலை உயர்வுகளுடன் திட்டமிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள போதுமாகக் காணப்படுவதில்லை.

### vi. ஓய்வூதியம் மற்றும் காப்புறுதி

விவசாய உற்பத்தியில் ஏற்படும் பொருளாதார ரீதியான இழப்புகளைத் தணிக்கவும், பூச்சிகள் மற்றும் நோய் ஆக்கிரமிப்புக்கள், பயிர்ச் சேதங்கள், காலநிலை மாற்றங்கள் மற்றும் இயற்கை பேரழிவுகள் போன்ற விவசாய தொழில் முயற்சிகளுடன் அடிக்கடி தொடர்புடைய அதிக இழப்புச் சாத்தியங்களுக்கான மற்றும் நிச்சயமற்ற தன்மைகளைத் குறைப்பதற்கு காப்புறுதி உதவுகிறது. ஓய்வூதியத்தின் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்திற்கு ஒப்பீட்டளவில் வயோதிபம் அடைந்துள்ள விவசாயிகளுக்கு தொடர்ச்சியாக வருமானம் வழங்கப்படும். அவர்களின் விவசாய செழிப்பினுள் விவசாயிகளுக்கு சவால் விடும் தனித்தன்மை வாய்ந்த அபாயங்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகளைக் கண்டறிந்து, MOA விவசாயத் துறைக்கு

காப்புறுதித் திட்டங்களை ஊக்குவிப்பதற்கும் செயல்படுத்துவதற்கும் உறுதிபூண்டுள்ளது. விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்தல், கஷ்டங்களை எதிர்கொள்ளத் தேவையான திறன்கள் மற்றும் நிலைபேறான விவசாய நடைமுறைகளை வளர்த்தல் ஆகியவற்றினை நோக்காகக் கொண்டு, அமைச்சு ஒரு வலுவானதும், பரிபூரணமானதுமான விவசாய காப்புறுதிக் கட்டமைப்பை நிறுவ முயல்கிறது. இதன்படி, (அ) வயதான விவசாயிகளுக்கான ஒய்வூதியம் (AAIB க்கு ரூபா. 4,750) மற்றும் (ஆ) விவசாயிகளுக்கான பங்களிப்பு காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்துதல் (AAIB க்கு ரூபா. 1,000) ஆகிய இரண்டு செயற்திட்டங்களையும் இலக்கு வைத்து 2023 ஆம் ஆண்டில் மொத்தம் ரூபா. 5,750 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.காப்புறுதித் திட்டம் மற்றும் தெளிவுகளைப் புரிந்து கொள்ள இத்தகைய தகவல்கள் அவசியம் என்று குழு கருதுகிறது. "பங்களிப்பு காப்புறுதித் திட்டம்" இற்கு விவசாயிகளிடமிருந்து தவணை அடிப்படையில் பங்களிப்பு எதுவும் இல்லாமல், ஆனால் அரசாங்கம் அதனை திறைசேரியிக்கு மேலதிக சுமையை ஏற்படுத்துகிறது என்றும் குழு குறிப்பிட்டுள்ளது.

### vii. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

விவசாய உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் பயிர்கள் மற்றும் விலங்குகள், விவசாய உற்பத்திகள் பயன்படுத்தப்படும் அல்லது தாக்கத்திற்கு உட்படும் இயற்கை வளங்கள் தொடர்பில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி; மற்றும் உற்பத்தி அமைப்பு மற்றும் அவர்களின் ஆதரவு விவசாயக் கட்டமைப்பை மேம்டுபத்துவதற்கான ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு முடிவெடுக்க உதவியாக அமையும். விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (R&D) அரச முதலீடு உணவு பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கு முக்கியமானது. விவசாயத் துறைக்கு உசிதமான தொழில்நுட்ப முன்னேற்றங்களுடன் நவீனமயமாக்கப்பட வேண்டியிருப்பதால், உயிரியல் மற்றும் காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் அபாயங்கள், அதிர்ச்சிகள் மற்றும் அச்சுறுத்தல்களை சமாளிப்பதற்கான முயற்சிகள், சுற்றுச்சூழல் உணர்திறன் ஆராய்ச்சி மற்றும் முதலீடு செய்வதற்கான முயற்சிகள் அவசியப்படுகிறது.

அரிசி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (RRDI), களப் பயிர்களின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (FCRDI) மற்றும் தோட்டப் பயிர்களின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (HORDI) ஆகிய மூன்று நிறுவனங்களும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான DoA இன் முக்கிய விடயப் பரப்பின் கீழ் இருப்பதைக் காண முடிகிறது. இதற்கு மேலதிகமாக, MOA இன் கீழ் உள்ள மற்றைய 08 நிறுவனங்களும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அவற்றின் முக்கிய விடயப் பரப்பினைப் பொருட்படுத்தாமல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. இந்த எட்டு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களின் கீழ் 2023 ஆம் ஆண்டிற்கு மொத்தம் 930 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீட்டை உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் இன்றியமையாத அங்கமாக இருக்கும் என இக்குழு முதன்மையாக ஒப்புக்கொள்கிறது, இருப்பினும், நிதி ஒதுக்கீடுகளை (உதா : அரச திணைக்களங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களால் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி) பயன்படுத்துவதற்கு ஆராய்ச்சித் துறையை இரட்டிப்புச் செய்யும் இயலுமையை குறிப்பிடுகிறது. ஆராய்ச்சி முடிவுகளை விவசாய விஸ்தரிப்புச் சேவைகளுடன் பரிமாற்றிக் கொள்வதற்காகபயனுள்ளபொறிமுறைகள் எதுவும் இல்லை என்றும், மேலும் ஆராய்ச்சிக்காக ஆர்வமுள்ள தரப்பினரின் நலனுக்காக டிஜிட்டல் வடிவத்தில் ஆராய்ச்சிக் களஞ்சியம் இல்லை என்றும் குழு குறிப்பிடுகிறது. விவசாயத் துறையின் விருத்திக்கு திறனுள்ள வகையில் பயன்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு ஆண்டினதும் ஆராய்ச்சி முடிவுகளைப் பகுப்பாய்வு செய்ய வருடாந்த அடிப்படையில் இத்தகைய தகவல்கள் தேவை என்றும் குழுவின் கருத்தாக உள்ளது.

### viii. நிறுவன அபிவிருத்தி மற்றும் மூலதன பரிமாற்றம்

போதியதற்ற மனித மற்றும் நிறுவன திறன், கிராமப்புற வறுமை, ஒப்பீட்டளவில் குறைந்த விவசாய உற்பத்தித்திறன், உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் நம்பகமான மற்றும் நிலையான தகவல்களின் மோசமான பிரவாகம் ஆகியவை இலங்கையின் பொருளாதாரத்தை திரிபடையச் செய்யும் பாதையை நோக்கி இட்டுச் செல்லும் என்பது குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளன. விவசாயத் துறையில் மனித மூலதனம் மற்றும் நிறுவன விவசாய அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குவது என்பது விதிவிலக்கல்ல.

> *2023 ஆம் ஆண்டிற்கான இந்தக் கூறுகளின் கீழ் மொத்த நிதி ஒதுக்கீடு ரூபா.1,476 மில்லியன் ஆகும் என்பதோடு, இதில் (அ) நெல் சந்தைப்படுத்தல் சபை (PMB; ரூபா.300 மில்லியன்), (ஆ) தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை (NFPBB; ரூபா.5 மில்லியன்), (இ) தேசிய விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் தீர்ப்பாய அதிகார சபை (ஹதபிம அதிகார சபை; ரூபா. 200 மில்லியன்), (ஈ) தேசிய உரச் செயலகத்தின் மாவட்ட அலுவலகங்களை மேம்படுத்துதல் (NFC; ரூபா. 20 மில்லியன்), (உ) கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் (DAD க்கு ரூபா. 850 மில்லியன் ), (ஊ) பொறித்தொகுதி, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் (DAD இற்கு ரூபா. 101 மில்லியன்) உள்ளடக்கியது.*

தேசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வாய்ப்புக்கு அவசியமானதாக இருந்தாலும், , மேலே கலந்துரையாடப்பட்ட முக்கிய எட்டு பகுதிகளில் பெரும்பாலானவற்றிற்கான செயற்பாட்டுத் திட்டங்கள் காணப்படுவதில்லை என குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளது. மேலும், அடிமட்ட நிலையின் முடிவுகளை வழங்குவதை உறுதி செய்வதற்கான திட்டமிடல் கட்டமைப்பில் உள்ள பலவீனங்கள் மற்றும் பயனுறுதி மிக்க பின்னூட்டல் பொறிமுறையொன்று காணப்படாமை, தேசிய மற்றும் மாகாண ரீதியில் விவசாயத் துறையில்(நன்கு நிறுவப்பட்ட அமைப்பை அங்கீகரிக்கப்படுவதோடு) நிர்வாக செயல்முறையில் மிக மோசமான குறைபாடாகக் காணப்படுகின்றது. MOA வின் ஒட்டுமொத்த நோக்கங்களை சரியான நேரத்தில் அடையாததற்கு இது ஒரு முக்கிய காரணமாக இருக்கலாம்.

MOA மற்றும் நிரல் திணைக்களங்கள் / முகவர் நிறுவனங்களின் கீழ் உள்ள சுமார் 28,000 ஊழியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள் என்பதோடு பயிற்சி பெற்ற மற்றும் திறமையான மனித வளங்களுடன் ஏராளமாக காணப்படுகின்றனர். MOH ஒட்டுமொத்த மனித வளத் தேவையில் 78% இனைப் பூர்த்தி செய்திருந்தாலும், அது DOA போன்ற நிறுவனங்களின் முற்போக்கான தன்மையை ஆதரிக்கும் அடிப்படை மனித வளமான தொழில்நுட்ப பதவிகளில் (முதன்மை விஞ்ஞானிகள், விவசாய ஆலோசகர்கள் (AIs), உண்மையான பணியாளர்கள் பிரிவு, ஒவ்வொரு தொழில்நுட்ப வகுதியின் தேவைப்பாட்டில் 40% இனை விடக் குறைவாகும். விவசாய ஆலோசகர்கள் என்போர் அடிமட்ட விவசாயிகளுக்கு விவசாய விஸ்தரிப்புச் சேவைகளை வழங்கும் முக்கிய நபர்களாக இருந்தாலும், உண்மையான பணியாளர்களின் தேவையில் 40% இனை விடக் குறைவாகவே உள்ளனர். ஆரம்ப விடயப் பரப்பிற்குப் புறம்பான மற்றொரு அதிகார சபையாக காணப்படுவதோடு, விவசாய ஆலோசகர்களின் மேற்பார்வையின் கீழ் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் (ARPA) ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சி மூலம் விவசாய விஸ்தரிப்புச் சேவையை வலுப்படுத்துவதற்கான முயற்சிகள் காலப்போக்கில் நீர்த்துப்போயுள்ளதாக குழு அவதானித்துள்ளது. ARPA இன் தேவையில் 74% இனை DAD இன் கீழ் பூர்த்தி செய்யப்பட்டாலும், அவர்களின் தொடர்பு DOA இன் செயற்பாடுகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், DOA இன் கீழ் 850 விவசாய ஆலோசகர்ளினால் மேற்கொள்ளப்படும் அடிமட்ட விவசாய விஸ்தரிப்பு நடவடிக்கைகள் விவசாயத்துடன் தொடர்பான நோக்கங்களை பூர்த்தி

செய்வதனை போதுமானளவு மேற்கொள்ளப்படவில்லை. மேலும், மாகாண விவசாய திணைக்களங்களின் கீழ் சுமார் 4000 பணியாளர்கள் பணியாற்றுகின்றனர், அவர்களில் சுமார் 1500 பேர் விவசாய விஸ்தரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இதன்படி, ஒரு விவசாய ஆலோசகருக்கு சுமார் 800 விவசாயக் குடும்பங்களுக்கான சேவைகளை வழங்க ஏற்படும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. இது நாட்டின் விவசாய அபிவிருத்திக்கு பாதகத்தை ஏற்படுத்தும் காரணியாக அமையும் என்பதில் ஐயமில்லை. விவசாயப் பிரிவிற்காக மிகவும் தொழில்நுட்ப அறிவுடன் கூடிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வது இந்நிலைமையை ஓரளவு இலகுவாக்கும் என குழு குறிப்பிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான உள்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்புவதற்கான மூலதன ஒதுக்கீட்டில் செலவழிப்பதைக் கட்டுப்படுத்தி, சமீபத்தில் வெளியிடப்பட்ட நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் மூலம் கட்டுமானம் தொடர்பான திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளுக்குத் தடையாக இருப்பதாக குழு மேலும் குறிப்பிட்டுள்ளது. கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் சிறு நீர்ப்பாசன சீர்திருத்தங்கள் தேவைப்படுகிறது, ஆனால் தற்போதைய நடைமுறையின் மூலம் வளப் பற்றாக்குறை பற்றி உரிய கவனம் செலுத்தி அவற்றை முறைப்படி புனர்நிர்மாணம் செய்வதற்குப் பதிலாக நலன்கள், நிர்ப்பாசன பிரதேசம், தேவைப்பாடு, மாற்றீட்டு நீர் மூலங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டுசரியான அணுகலில் கவனம் செலுத்தாது தற்காலிக தேர்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, இந்தக் கட்டுமானங்கள்/புனர்வாழ்வுகளில் அநேகமான பயனாளிகளுக்கு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதாகத் தெரியவில்லை என்று குழு குறிப்பிட்டுள்ளது.

### 3. நிலவுகின்ற வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் இரட்டிப்பு, வீண்விரயம் மற்றும் சிறு திட்டங்கள் அல்லது செலவுகளை கண்டறிதல்.

PERC குழு அதன் முயற்சியால் MOA இல் காணப்படுகின்ற வரவு செலவுத் திட்டத்தில் இரட்டிப்பு, வீண்விரயம் மற்றும் சிறிய திட்டம்/செலவு உறுப்படிகளைக் கண்டறிந்து, பின்வருமாறு மறுபரிசீலனை செய்யப் பரிந்துரைக்கப்பட்டது:

#### இரட்டிப்பு

MOA இன் மூலம் மேற்கொள்ளப்படும் பெரும்பாலான நடவடிக்கைகள் அடிமட்ட மட்டத்திலிருந்து மேற்கொள்ளப்படுகின்றன. இதன் விளைவாக, செயற்பாடுகளின் தன்மை, சிக்கலான நிலை, முன்முயற்சிகளின் பரந்த அளவிலான உள்ளடக்கம், குறிப்பிடத்தக்க வாடிக்கையாளர் குழுவினை ஈடுபடுத்துவதனைப் போன்றே அடிமட்ட அளவில் தயவுக் கொடுப்பனவு மற்றும் நிதி நன்கொடைகளை வழங்கும் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் பிற செலவுகளைக் குறைக்கும் திட்டங்கள் காரணமாக, இந்த நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் ஒருசில இரட்டிப்புக்கு வழிவகுக்கின்றன.பயிர் உற்பத்தி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, உதவுத் தொகை, உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடு மற்றும் வாழ்வாதார ஆதரவு போன்ற பல்வேறு துறைகளில் MOA இன் வரவு செலவுத் திட்டத்தில் மற்றவைகளுடன்இத்தகைய இரட்டிப்புக்களும் ஏற்படுகின்றன. எவ்வாறாயினும், இந்த இரட்டிப்புக்களை அடையாளம் காண்பது என்பது ஒரு தெளிவான சவால் மிகுந்த பணியாகும் என்பதோடு, KPIs களின் (Key Performance Index) இன் அடிப்படையில் செயற்பாடுகள் மற்றும் முடிவுகளின் ஆழமான பகுப்பாய்வு தேவைப்படுகிறது. ( உதாரணம் : துணைப் பயிர்ச் செய்கை திட்டம் மற்றும் உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டம், வீட்டுத் தோட்டத் திட்டம்).

**வீண்விரயம்**

பல்வேறு வழிகளில் விரயமாதல் இடம்பெற முடியும், இருப்பினும், வள ஒதுக்கீட்டை மேம்படுத்தவும், உற்பத்தித்திறனை அதிகரிக்கவும் மற்றும் பல்வேறு துறைகளில் நிலைபேறான முடிவுகளை அடையவும் வீண்விரயமாதல் இடம்பெறக்கூடிய இத்தகைய துறைகளை அணுகுவது அவசியமாகும். நிதி ஒதுக்கீடு வீண்விரயமாதல் அல்லது விரயமாவதற்கு வழிவகுக்கும் சில அளவுகோல்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

- ஒதுக்கப்பட்ட நிதியானது எதிர்பார்த்த பணிகளுக்கு திறம்பட பயன்படுத்தப்படாமை.
- ஒழுங்குமுறை விதிகள் இல்லாமல் பயன்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகள் (உதா. தற்போதைப் போன்றே, மண் பரிசோதனை முடிவுகள் உர பயன்பாட்டிற்கு கட்டாயத் தேவையாக இருக்கமாட்டாது).
- வழங்கப்பட்டுள்ள நிதி மானியங்கள் மற்றும் உதவுத் தொகைகள்எதிர்பார்க்கப்படும் பணிகளுக்கு பயன்படுத்தப்படுகின்றதா என்பதனை உறுதி செய்வதற்காக முறையான பொறிமுறையொன்று காணப்படாது திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்தல் (உதா: துணை பயிர்ச் செய்கைத் திட்டம் மற்றும் உணவு பாதுகாப்பு திட்டம்).

**சிறிய செயற்திட்டங்கள்/நிறுவனங்கள்**

அமைச்சில் அல்லது செயல்படுத்தும் முகவர் நிறுவனத்தின்அதிகாரத்துடன் இணங்காத எந்தவொரு செயற்திட்டத்திற்கும் நிதியுதவி அளிப்பது முக்கியமில்லை எனக் கருதப்படலாம். மேலும், ஒரு செயற்திட்டம் அதன் எதிர்பார்ப்பிற்குரிய இலக்குகளை அடைந்துள்ள போது, மற்றும் அதன் செயல்பாடுகள் குறிப்பிட்ட நோக்கமின்றி இழுத்தடிப்புச் செய்யும் போது தொடர்ச்சியான நிதியுதவியினை வழங்குவது பொருத்தமான செயலன்று. எனவே, அத்தகைய சிறிய செயற்திட்டங்கள்/நிறுவனங்களின் இருப்புக்கான தேவைப்பாடு (உதா: இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை, CARP, ஹதபிம அதிகாரசபை) நிதியளிப்பதற்கு முன் மறுமதிப்பீடு செய்ய வேண்டும்.

**4. தேவைக்கு உத்தரவாதம் அளிக்கும் முன்னுரிமைத் திட்டங்களைக் கண்டறிதல், அமைச்சு/திணைக்களத்தின் கீழ் செயல்படுத்தப்படும் குறைந்தபட்சம் 3 அடிப்படைத் திட்டங்களைக் கண்டறிதல், அத்தகைய திட்டங்களை வழங்குவதற்கான காரணங்களையும் கண்டறிதல்.**

முன்மொழியப்பட்ட அனைத்து திட்டங்களும் அவற்றின் நோக்கங்கள், குணாதிசயங்கள், கட்டாய செயல்பாடுகள், தரநிலைகள் மற்றும் தொடர்புடைய தேவைகளை சேதங்கள் இன்றி இலாபமீட்டும் நோக்கில் செயல்படுத்தப்பட வேண்டும் என்று குழு வலியுறுத்துகிறது. பிரிவின் முன்னுரிமைகள் மற்றும் தற்போதைய பொருளாதார நிலைமை ஆகியவற்றைக் கருத்தில் கொண்ட குழு, நிறுவப்பட்ட முன்னுரிமை அளவுகோல்கள் மற்றும் தேசிய பொருளாதாரத்தில் காட்டும் பங்களிப்புக்கு ஏற்ப அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் / தரவுகள், மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் உரையாடல்கள் மற்றும் குழுவின் கருத்தின் அடிப்படையில் (அ) MOA வின் தொலைநோக்கு மற்றும் நோக்கங்களுடன் இணங்குதல், (ஆ) இடைவெளிகளைக் குறைப்பதற்காக பிற திட்டங்களுக்கு கிடைமட்ட/செங்குத்துகளை தொடர்புபடுத்தல், (இ) வள பயன்பாட்டின் செயல்திறன் மற்றும் முடிவுகளை வழங்குதல், மற்றும் (ஈ) தற்போதைய மற்றும் முன்கணிப்பு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் பற்றிய

விடயங்களை கருத்தில் கொண்டு வரவு செலவுத் திட்ட மூல உறுப்பபடிகள் 38 இனையும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. MOA வின் தொலைநோக்கு பார்வையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு, விவசாய அமைச்சின் மற்றும் நாடு முழுவதும் அடைய வேண்டிய ஒட்டுமொத்த இலக்காக உணவுப் பாதுகாப்பைக் கருத்தில் கொள்ள குழு முடிவு செய்துள்ளது. அதன்படி, குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள TOR இன் படி அடையாளம் காணப்பட்டுளள உயர் முன்னுரிமை திட்டங்கள், காரண காரியங்களுடன் அட்டவணை -3 இல் பட்டியலிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 3: செயற்திட்ட முன்னுரிமைப்படுத்துகை**

| நிகழ்ச்சித்திட்டம் | ஆரம்ப நிலை மட்டம் | முன்னுரிமை வழங்குவதற்கான காரணம் |
|---|---|---|
| உர மானிய திட்டம் | உயர் | உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும் (ஒரு அலகின் உள்ளீட்டின் உற்பத்தியை அதிகரித்தல்) மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கு அவசியப்படும் பிரதான உள்ளீடாகும். வலுவான விவசாய விஸ்தரிப்புச் சேவையுடன் நாடு பூராகவும் உள்ளடக்குதல். |
| விதை மற்றும் நடுகைப் பொருள் உற்பத்தி மற்றும் தாவரப் பாதுகாப்பு | உயர் | உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக அவசியப்படும் பிரதான உள்ளீடாகும். நாடு பூராகவும் சான்றளிக்கப்பட்ட விதைகள் மற்றும் நடவுப் பொருட்களின் பயன்பாட்டினை அதிகரித்தல். வலுவான விவசாய விஸ்தரிப்புச் சேவையுடன் நாடு பூராகவும் உள்ளடக்குதல். |
| சிறு நீர்ப்பாசன முறைகளின் நவீனமயமாக்கல் | உயர் | காணியின் பயனுறுதி மற்றும் பயிர் பல்வகைப்படுத்துதலுக்கான சாத்தியத்தை அதிகரித்தல். நீர் பயன்பாட்டு திறனை அதிகரித்தல். வலுவான விவசாய விஸ்தரிப்புச் சேவையுடன் நாடு பூராகவும் உள்ளடக்குதல். |
| தொற்றுகின்ற நோய் கட்டுப்பாடு | உயர் | கால்நடைகள் மற்றும் கால்நடை தயாரிப்புகளின் தரம் மற்றும் அளவினை மேம்படுத்தல், வலுவான விவசாய விஸ்தரிப்புச் சேவைகளுடன் நாடு பூராகவும் உள்ளடக்குதல். |
| சிறிய மற்றும் நடுத்தர கால்நடைகளை மேம்படுத்துதல். | உயர் | உயர்தர இனப்பெருக்க முறைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம் பால் உற்பத்தியை அதிகரித்தல். |
| உரத் திட்டத்தின் பொறுப்புகள் | உயர் | உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு பங்களிக்கும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

முன்னுரிமை வழங்க பயன்படுத்தப்படும் அளவுகோல்களுடன் நேரடியாக இணங்கும் மேற்படி உயர் முன்னுரிமைத் திட்டங்களுக்கு மேலதிகமாக,வெளிநாட்டு கடன் நிதியுதவியின் கீழ் செயல்படுத்தப்படும் ஐந்து மெகா அபிவிருத்தித் திட்டங்களும் உள்ளன. ஒதுக்கீட்டு ஒப்பந்தங்கள், இதுவரை செய்யப்பட்ட முதலீடுகள், பங்களிப்புகள் மற்றும் வட்டிக் கட்டணங்களைப் போன்றே திட்டத்தின் அபிவிருத்தி நோக்கங்களை அடைவதன் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு, அவற்றில்அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டு,உற்பத்தித் திறன் மிக்கதாக செயற்படுவதற்கும்,குறிப்பிட்ட

காலக்கெடுவுக்குள் முழுமைப்படுத்துவதற்கும் குழு பரிந்துரைக்கிறது.

**5. வளங்களின் உகந்த பயன்பாட்டை உறுதி செய்வதற்காக வினைத்திறனான மற்றும் பயனுறுதி வாய்ந்த நடைமுறைகள் மற்றும் செலவுக் காரணிகளை அடையாளம் காணல்.**

குழுவானது, பல கலந்துரையாடல்களின் பிற்பாடு, MOA மற்றும் அதன் திணைக்களங்கள்/முகவர் நிறுவனங்களில் திறமையான வளப் பயன்பாடு மற்றும் பயனுள்ள விளைவுகளுக்கான வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் நடைமுறைகள் மற்றும் செலவுக் காரணிகளுக்கு ஆதரவாக பின்வருவனவற்றைக் கண்டறிந்துள்ளது.

- மானியத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் (உதா: உர மானியத் திட்டம்) ஐந்தில் ஒரு பங்கு (21%) அதன் செயல்பாட்டு மற்றும் விநியோகச் செலவுகளுக்காக செலவிடப்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. செயற்பாட்டுச் செலவாக ஒதுக்கப்பட்டுள்ள இந்த குறிப்பிடத்தக்க தொகை புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட வவுச்சர்/பணப் பரிமாற்ற முறையுடன் வரவு செலவுத் திட்டத்தில் இருந்து நீக்க முடியும் என PERC இனால் அவதானிக்கப்பட்டுள்ளது. மேலும், உர மானியக் கொடுப்பனவுகள் குறித்த தெளிவை உருவாக்குவதற்கான அர்ப்பணிப்பாக வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் நீண்ட கால பொறுப்புகள் மற்றும் முந்தைய ஆண்டின் விலைப்பட்டியல் கொடுப்பனவுச் செலவுகள் மதிப்பீட்டில் தனித்தனியாக காட்டப்பட வேண்டும் என்று PERC பரிந்துரைக்கிறது.

- உரங்களை திறம்பட பயன்படுத்துவதற்கு மண் பரிசோதனை ஒரு பயனுள்ள நடைமுறையாக இருந்தாலும், அது உர மானிய திட்டத்துடன் இணைக்கப்படவில்லை. உரங்களைப் பயன்படுத்துவதற்கு மண் பரிசோதனை கட்டாயமான தேவையாகும் ஒழுங்குமுறையொன்று இல்லாமல், அத்தகைய பயன்பாட்டிற்கு பணம் ஒதுக்குவதும் வீண்விரயத்திற்கு வழிவகுக்கிறது. மண் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் உர விநியோகப் பொறிமுறையைப் பின்பற்றுவது வினைத்திறனான செலவுக்கான காரணியாகும் என்பதோடு சிறந்த சீர்திருத்தமாகவும் அமையும்.

  விவசாயிகளுக்கு பணப் பரிமாற்றங்களைச் செய்தல் மற்றும் உர விநியோகத்திற்கு கமநல அபிவிருத்தி திணைக்களம் (DAD) கீழ் உள்ள வலையமைப்பு தரவுத் தளமான Geo--Goviya ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அனைத்து பயனாளிகளுக்கும் உரித்தான ஆதரவுத் திட்டங்களுக்கும் ஒரு தரவுத்தளத்தைப் பயன்படுத்துவது பைனரி சமத்துவத்தையும் துல்லியமான இலக்கையும் உறுதி செய்கிறது. எனவே, MOA மற்றும் பிற நிரல் திணைக்களங்களினால் செயல்படுத்தப்படும் அனைத்து நிதி நன்கொடைகள், உதவுத் தொகைகள் மற்றும் சகல பயனாளிகளுக்குமான நிகழ்ச்சித்திட்டங்களையும் உள்ளடக்கிய ஒரு ஒருங்கிணைந்த நிகழ்நிலையை பொதுவான ஒரு தளமாகக் கொண்டு இத்தகைய வசதியை விரிவுபடுத்துவது மிகவும் முக்கியமானது.

- MoA மற்றும் நிரல் திணைக்களங்கள் நன்கு பயிற்சி பெற்ற, திறமையான மற்றும் கல்வி சார் அடிப்படையில் திறமையான மனித வளங்களை ஏராளமாகக் கொண்டுள்ளன. எனவே, அனைத்து பாரிய அளவிலான திட்டங்களும் அத்தகைய நபர்களின் தொழில் மற்றும் அவர்களின் தேர்ச்சியினாலும்பயனடைகின்றன. குறிப்பிட்ட துறைகளில் மனித வளம் இல்லாத இடங்களில் மட்டுமே கதவுகள் திறக்கப்படல் வேண்டும். இந்த நடைமுறை திட்ட வெளியீடுகளின் நிலைத்தன்மை

மற்றும் உரிமையை ஊக்குவித்தல், அத்தகைய திட்டங்களின் நிறுவன வரலாற்றைப் பாதுகாப்பதனைப் போன்றே அபிவிருத்தி திட்டங்களில் சொத்துக்களை திறம்பட ஒப்படைப்பதற்கும் பராமரிக்கவும் ஏற்படுகிறது.

- எதிர்வரும் பயிர்ச் செய்கைப் போகத்தில் விவசாய நடவடிக்கைகளை திட்டமிடுவதற்காக முக்கிய பங்குதாரர்களைக் கொண்ட நிறுவனங்களின் பங்களிப்பைப் பெறுவதற்கான ஒரு பொறிமுறையை விவசாய அமைச்சினால் சமீபத்தில் தொடங்கப்பட்டுள்ளது. எடுக்கப்பட்ட முடிவுகளின் முன்னேற்றத்தை முறையாக கண்காணித்தல் மற்றும் பங்குதார நிறுவனங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை உறுதி செய்வதற்காக வெளியிடப்பட்ட ஒரு சுற்றறிக்கையுடன் செயல்முறை முறைப்படுத்தலை உள்ளீடு செய்வதற்காக இந்த சிறந்த நடைமுறையை மாதந்தோறும் தொடர்ச்சியாக பேணி வரல் வேண்டும்.

- பலவீனமான ஆராய்ச்சி (மத்திய அரசு) மற்றும் விரிவாக்கம் (முக்கியமாக மாகாண சபைகள்) இணைப்புகளுடன் கூடிய இலங்கையின் விவசாய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க அமைப்பில் உள்ள திறமையின்மை பெரும் குறைபாடுகளாகக் கருதப்படுகின்றன. விவசாய விரிவாக்கம் என்பது அரசியலமைப்பின் 13 வது திருத்தத்தின் மூலம் ஒப்படை விடயப் பரப்பு என்பதால், அங்கு மாகாணங்களுக்கு இடையேயான பிரதேசங்களை விரிவுபடுத்துவது (நாடு தழுவிய ஆராய்ச்சி திட்டங்களுக்கு மேலதிகமாக) விவசாயத் திணைக்களமும், மகாவலி விவசாயப் பிரதேசங்களையும் விரிவுபடுத்துவது தொடர்பாக இலங்கை
மகாவலி அதிகாரசபையும் பொறுப்பு என்பதை அக்குழு ஏற்றுக் கொள்கிறது. நாட்டின் விவசாயத் துறையின் முன்னேற்றத்தில் பெரும் பின்னடைவை அடைந்துள்ளதாகவும், விவசாயத்தில் அரச செலவினங்களை திறமையற்ற முறையில் பயன்படுத்துவதற்கு காரணமான முக்கிய காரணியாக, விஸ்தரிக்கப்பட்டதும் அதன் காரணமாக பலவீனமான ஆராய்ச்சி- விரிவாக்கத் தொடர்பு முக்கிய காரணியென இந்தக் குழு கருதுகிறது.

- DOA வினால் 2016 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை சிறந்த விவசாய செயன்முறை (SLGAP) சான்றளிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. இருப்பினும், SLGAP வழிகாட்டுதல்கள் உலகளாவிய GAP உடன் இணைவதற்காக நிறுவப்பட்டுள்ளதோடு, அதன் மூலம் கிராமப்புற விவசாயிகளுக்கு அதனை அணுகுவதற்கு கடினமாக இருக்கும். இதற்கு மேலதிகமாக, SLGAP முக்கியமாக DOA இனால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் பின்பற்றப்பட்டு வருவதோடு, இந்த வெற்றிக்காக பரிந்துரைக்கப்பட்ட விவசாய உள்ளீடுகளை பெறக்கூடியதாகவும், அணுகக்கூடியதாகவும் மற்றும் மலிவான விலையிலும் வழங்க வேண்டும். விவசாய உள்ளீடுகளை சரியான நேரத்திலும் மலிவு விலையிலும் கிடைக்காததால் விவசாய சமூகம் SLGAP இலிருந்து விலகிச் செல்ல காரணமாக அமைந்துள்ளது. குறைவான அபாயத்துடன் வழிகாட்டுதல்களுடன் கூடிய - GAP இன் மூலம் விவசாயிகளுக்கு தொழில்நுட்பத்தை தழுவிக் கொள்ளவும், அதன் மூலம் உற்பத்தித்திறன் மற்றும் உணவுப் பாதுகாப்பை அதிகரிக்கவும், விவசாய உள்ளீடுகளை தவறாகப் பயன்படுத்துவதை விட்டும் தடுப்பதன் மூலம் விவசாய நடவடிக்கைகளுக்கு அரச நிதியை திறம்பட பயன்படுத்தவும் உதவியாக இருக்கும் என குழு கருதுகிறது.

**6. MOA இன் பொறுப்புகளை நிறைவேற்றவும் மற்றும் "உரிய செலவு - சரியான நேரத்தில்" என்றவகையில் அரசின் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடையக்கூடிய சீர்திருத்தங்கள் மற்றும் கட்டமைப்புகளை முன்மொழிதல்.**

MOA ஆனது தனது பொறுப்புகளை நிறைவேற்றுவதையும், அரசாங்கத்தினால் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை பயனுள்ளதாகவும், இலாபகரமானதும், காலத்துக்கு

ஏற்றவகையிலும் அடைந்து கொள்வதனை உறுதிசெய்வதற்காகவும், PERC பின்வரும் பரிந்துரைகளை முன்மொழிகிறது:

1. தொலைநோக்கு ஒட்டுமொத்த விவசாயத் துறையிலும் கவனம் செலுத்தும் அதே வேளையில், பணிக்கூற்று அநேகமாக ஏற்றுமதி விவசாயத்தில் கவனம் செலுத்துகிறது, இது தற்போது அமைச்சின் கட்டாய செயல்பாடுகளில் சேர்க்கப்படவில்லை. எனவே, உற்பத்தி, பயன்விளைதிறன் மிக்க மற்றும் தாக்குப்பிடிக்கும் விவசாயத் துறையை வளர்ப்பதற்காக மூலோபாயப் பகுதிகளின் கீழ் அடையாளம் காணப்பட்ட முக்கிய செயல்பாடுகளை உள்ளடக்கிய பணியை மறுபரிசீலனை செய்ய குழு முன்மொழிகிறது. அதன்படி, பணிக்கூற்றை பின்வருமாறு மாற்றியமைக்க குழு முன்மொழிந்துள்ளது.

***நிலைபேறான, மாறுபட்ட மற்றும் நெகிழ்வான விவசாயத் துறைக்கு வசதி வாய்ப்புக்களை வழங்கல், விவசாய நடைமுறைகளை நவீனமயமாக்குதல், புத்தாக்கங்களை வளர்த்தல், வளங்களின் சமமான விநியோகத்தை உறுதி செய்தல் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் போது விவசாயிகளின் அதிகாரத்திற்கு முன்னுரிமை அளிப்பதே எங்கள் தொலைநோக்காகும்.***

2. விவசாயத் துறைக்கான செயலாக்கங்கள் மற்றும் வழிகாட்டுதலை உறுதிப்படுத்துவதற்காக தேசிய விவசாயக் கொள்கையொன்று இல்லை என்பதை குழு அவதானித்துள்ளது. இதற்கு மேலதிகமாக, சாதனைகளை அடைந்து கொள்வதற்கான செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் நன்கு வடிவமைக்கப்பட்டகட்டமைப்பு எதுவும் இல்லை. எனவே, ஏற்கனவே அங்கீகாரத்திற்காக பட்டியலிடப்பட்டுள்ள வரைவிடப்பட்டுள்ள விவசாயக் கொள்கை கால்நடைகள் மற்றும் பால் உற்பத்திகளுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு இல்லாததால், அதனை மறுபரிசீலனை செய்ய குழு பரிந்துரைக்கிறது. மேலும், அமைச்சின் வெளியீட்டுக் கட்டமைப்பை முடிவுறச் செய்ய முடியுமான வகையில், கொள்கைகளை சீரமைத்து மற்றும் பிற தொடர்புடைய துறைகளை தாண்டி முன்னேறிச் செல்லும் மூலோபாயத்திற்கு அதிக முன்னுரிமை கொடுக்கப்படல் வேண்டும்.

3. பல்வேறு நிறுவனங்களின் முயற்சிகளை இரட்டிப்பாவதனை தவிர்த்து, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கானதொடர் நிதியுதவியைப் பெறுவது, விவசாயத் துறையின் முன்னேற்றத்திற்கு பங்களிக்கும் ஒரு முக்கிய காரணியாகும் என்பதை குழு ஒப்புக்கொள்கிறது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளைப் பரப்புவதில் உள்ள திறனற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு, சகல தரப்பினராலும் பயன்படுத்துவதற்கு முடியுமான வகையிலும், எளிதாக அணுகக்கூடியதாகவும், அன்றாடம் இற்றைப்படுத்த முடியுமானதாக விவசாயத் துறையில் பல்வேறு விடயங்கள் உள்ளடங்கும் வகையில் டிஜிட்டல் வடிவில் ஆராய்ச்சிக் களஞ்சியத்தை நிறுவுவதன் மூலம், ஆராய்ச்சி - விரிவாகத் தொடர்பினை பலப்படுத்துவதற்கு குழு பரிந்துரைக்கிறது. தேசிய வரவு செலவுத் திட்டத்தினால் வழங்கப்படும் நிதி ஏற்பாடுகளை தீர்மானிப்பதில் வருடாந்த அடிப்படையில் விவசாயத் துறையின் விருத்திக்கான ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளின் பங்களிப்பை பகுப்பாய்வு செய்ய வேண்டும் என்று குழு பரிந்துரைக்கிறது.

4. விவசாய ஆலோசர்களின் மூலம் மேற்கொள்ளப்படும் விவசாய விஸ்தரிப்புச் சேவை மூலம் கீழ் மட்டத்தில் உள்ள விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தும் ஆராய்ச்சி முடிவுகள் வரவில்லை என்றால், ஆராய்ச்சிக்காக ஒதுக்கப்படும் நிதி விணாகிவிடும்.

மத்திய நிர்வாக முறைமையின் கீழ், விவசாயத் திணைக்களத்திற்கு விவசாயத்தில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விதிக்கப்பட்டுள்ள, ஆனால் விவசாயிகளுக்கு தகவல் பரிமாற்றம் மாகாண சபைகளின் கீழ் இயங்கும் விவசாய ஆலோசகர்களின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் விவசாய விவசாய விஸ்தரிப்புச் சேவைகளின் மோசமான ஒருங்கிணைப்பு மற்றும் துறைசார்மயமாக்கல்;ஆராய்ச்சி முடிவுகளை விவசாயிகளுக்கு திறம்பட மொழிபெயர்ப்பதில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதை குழு அவதானித்துள்ளது. எனவே, மத்திய அரசிடமிருந்து மாகாணக் கட்டமைப்புகளுக்கு நேரடிச் செயல்பாட்டை நிறுவுவதற்கு, சிதறிய விரிவாக்கச் சேவைகளை ஒரே குடையின் கீழ் ஒருங்கிணைத்து நவீன தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்; ஆராய்ச்சிகளில் இருந்து விவசாயியை நோக்கி தகவல்களின் சுமூகமான ஓட்டம் மற்றும் அரச நிதியை சிறப்பாக பயன்படுத்த முடியுமான வகையில் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க அமைப்பிற்கிடையில் உறுதியான இணைப்பினை ஏற்படுத்துவது இன்றியமையாததாகும்.

5. DOA வினால் முன்மொழியப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள ஒரு விரிவான தொழில்நுட்ப நீரோட்டமானது, இலங்கை சிறந்த விவசாய நடைமுறைகள் (SLGAP), விவசாயப் பொருட்களின் உற்பத்தி மற்றும் உற்பத்திப் பாதுகாப்பை மேம்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. உலகளாவிய GAP களுடன் மிகவும் இணைந்திருப்பதால், அவற்றின் ஒருசில உள்நாட்டு நிலைமைகளின் கீழ் அடைந்து கொள்வதற்கு முடியாமற் போகும் தற்போதைய வழிகாட்டுதல்களின் குறைபாடுகளை ஒப்புக்கொள்வது, வளங்களை முறைகேடாக பயன்படுத்தல் (உரங்கள், நீர் போன்றவை உள்ளிட்ட) குறைத்தல் மற்றும் விவசாயத்திற்கான அரசின் செலவுகளைக் குறைத்துக் கொள்வதோடு, பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு விவசாயச் சமூகத்திற்கு முடியுமான வகையில் காலநிலை ஸ்மார்ட் GAP (CSGAP) என்ற தலைப்பின் கீழ் ஆரம்ப GAP ஐ செயல்படுத்துவதற்கு குழு பரிந்துரைக்கிறது.

6. வழங்கப்பட்ட மானியங்கள்/வவுச்சர்கள் மற்றும் உதவுத்தொகை ஆகியவை இறுதிப் பயனர்களால் எதிர்பார்க்கப்பட்டநோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கான சரியான பொறிமுறை இல்லாமல், அத்தகைய திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு செய்வது இலாபகரமானதாக இருக்காது. மேலும், பயனாளிகள் மட்டத்தில் இரட்டிப்புகள் இல்லாமல் இருந்தாலும், செயல்பாடுகள், நிகழ்ச்சித்திட்ட வகை, உட்படும் பிரதேசங்கள் போன்ற வரவு செலவுத் திட்ட அடிப்படை உருப்படிகளின் பல்வேறு அம்சங்களில் இரட்டிப்பாகும் வாய்ப்பு உள்ளது.இருப்பினும், இத்தகைய இரட்டிப்புக்களை சுட்டிக்காட்டுவது சவாலானதாகும். எனவே, அத்தகைய திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கும், வரவுசெலவுத் திட்ட ஆதாரங்களுக்கு இடையேயான செயல்பாடுகளை இரட்டிப்பாக்கலை தவிர்ப்பதற்காக ஒருங்கிணைக்கப்பட்ட இற்றைப்படுத்திய தரவுத் தளத்தைப் பராமரிப்பதனை உறுதி செய்வதற்கும் குழு பரிந்துரைக்கிறது. மேலும், வளங்களினால் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டிற்கு ஆதரவாக நிதியை திறம்பட பயன்படுத்துவதை உறுதிசெய்ய வலுவான சரிபார்ப்பு பொறிமுறையை செயல்படுத்தவும் பரிந்துரைக்கிறது.

7. வளங்கள், நிபுணத்துவம் மற்றும் புதிய யோசனைகளைப் பயன்படுத்துவதற்காக தனியார் துறை மற்றும் மற்றைய பங்குதாரர்களுடன் ஒத்துழைப்பை மேம்படுத்திக் கொள்ளல். இத்தகைய கூட்டாண்மைகள் மூலம் செயல்திறனை மேம்படுத்தலாம் என்பதோடு, தொழில்நுட்ப திறன் மற்றும் நிதியியல் அடிப்படையில் மேலதிக

வளங்களை கொண்டு சேர்க்கும்.

8. தேசிய வரவு செலவுத் திட்டத்தில் MOA க்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகளவிலான பங்கு உர மானியத்திற்காகவே என்று குழு குறிப்பிட்டுள்ளது. உரங்களுக்கான அரச மானியம் மிகவும் பாதிக்கப்படக்கூடிய விவசாய சமூகங்களுக்கு மட்டுமே கிடைக்கும் வகையில் மானியத் திட்டத்தின் அவசியத்தை குழு கண்டறிந்து, காரணங்களை முன்வைக்க பரிந்துரைக்கிறது. மேலும், மனித மற்றும் சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், உர மானியத்திற்கான அரசாங்க செலவைக் குறைக்கவும் முற்படுவதோடு, பயிர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்க செயற்கை மற்றும் கரிம உரங்களின் கலவையைப் பயன்படுத்தி ஒருங்கிணைந்த தாவர ஊட்டச்சத்து உயிரிச்சக்கரம் (IPNS) தொடர்பிலான திட்டத்தை செயல்படுத்தவும், குழு பரிந்துரைக்கிறது.

9. வயது முதிர்ந்த விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் மற்றும் விவசாயிகளுக்கான பங்களிப்புக் காப்புறுதித் திட்டம் பற்றிய தகவல்கள் துல்லியமாக இல்லை என்று குழுவினால் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி, தேசிய வரவுசெலவுத் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டை நியாயப்படுத்த கடந்த மூன்று ஆண்டுகளின் அடிப்படையில் பொருந்தக்கூடிய காலநிலை மற்றும் பயிர் பிராந்தியத்திற்கு ஏற்ப காப்புறுதிகளை வழங்க குழு பரிந்துரைக்கிறது. மேலும், 'பங்களிப்பு காப்புறுதித் திட்டத்தில்' விவசாயிகளின் பங்களிப்பு இல்லை என்பதைக் குறிப்பிடும் அதே வேளையில், விவசாயிகளினால் தவணைக் கட்டணப் பங்களிப்பை உறுதி செய்யுமாறு குழு கடுமையாகப் பரிந்துரைக்கிறது. காப்புறுதி திட்டத்தில் சமூகப் பெறுமானங்கள் இருப்பதன் காரணமாகவும், மேம்படுத்துவதற்காக இந்த தவணைக் கட்டணத்தை செலுத்த உர மானியத்துடன் அல்லது மற்றொரு நிதி ஒதுக்கீட்டுடன் இணைக்கவும் முடியும்.

10. நிதி ஒதுக்கீடுகளின் அதிகரிக்கும் பலன்கள் குறித்து எந்த நியாயமும் கூறப்படவில்லை என்பதை குழு அவதானித்துள்ளது. எனவே, கடந்தகால ஆண்டுகளில் நிதி ஒதுக்கீடுகளின் முன்னேற்றம் மற்றும் முடிவுகளைப் போன்றே கோரப்பட்டுள்ள வரவு செலவுத் திட்ட உறுப்படிகளுக்கான இலக்கினைக் கொண்ட நலன்கள் மற்றும் பயனாளிகளை நியாயப்படுத்தலின் அடிப்படையில் எதிர்வரும் வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என குழு கடுமையாக பரிந்துரைக்கிறது.

11. விவசாய அபிவிருத்தியை மேம்படுத்தி தேசத்திற்கு தொழில்சார் சேவைகளை வழங்கும் வகையில் MOA மற்றும் நிரல் திணைக்களங்கள் / முகவர் நிறுவனங்களில் உள்ள சகல வகுதியினையும் சார்ந்த பணியாளர்களுக்கு தொடர்ச்சியான தொழில்முறை அபிவிருத்தி (CPD) அவசியப்படுகிறது. எனவே, விவசாயத் துறையை தொழில்முறையாக மேம்படுத்துவதற்கு பிற அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்கள், தொழில்முறை அமைப்புகள் மற்றும் அபிவிருத்தி பங்காளிகளுடன் ஒன்றிணைந்து இத்தகைய CPD இன் நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடவும் அபிவிருத்தி செய்யவும் குழு கடுமையாக பரிந்துரைக்கிறது.

12. விவசாயப் பொருட்கள் நுகர்வோருக்கு நியாயமான விலையில் கிடைப்பதை உறுதி செய்யும் அதே வேளையில், அவர்களின் பண்ணை இலாபம் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் விவசாயச் சமூகத்திற்கு அதிக தொழில்முயற்சிவிவசாயத்தை நோக்கி வழிகாட்டுவது முக்கியமாகும். எனவே, உணவு முறை (உள்ளீடு வழங்கலில் இருந்து நுகர்வோனில் இருந்து வெளியாகும் கழிவு முகாமைத்துவம் வரை), சந்தைப்படுத்துதல், மதிப்பு சங்கிலி மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள்

ஆகியவை பற்றி விவசாயிகளுக்கு விழிப்பூட்டுமாறு குழு கடுமையாக பரிந்துரைக்கிறது.

13. ஏற்றுமதி நோக்குநிலை மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி இலங்கையின் விவசாயத் துறையை புத்துயிர் பெறுவதற்கான முக்கிய கூறுகளாகும். ஏற்றுமதி விவசாயப் பயிர்களை இலக்காகக் கொண்ட பல அபிவிருத்தித் திட்டங்கள் கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த போதிலும், முக்கியமாக அவதானம் செலுத்தப்படாமை மற்றும் வினைத்திறனற்ற ஒருங்கிணைப்பு ஆகியவை காரணமாக இந்தத் திட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்ட வெற்றியைப் பெற்றுள்ளன. உணவுப் பயிர்கள், ஏற்றுமதி விவசாயப் பயிர்கள், பெருந்தோட்டப் பயிர்கள் மற்றும் கால்நடைகள் மற்றும் கோழி வளர்ப்பு உள்ளிட்ட விவசாய விடயப் பரப்பை மாற்றுவதற்கு பல்வேறு அதிகாரங்களைக் கொண்ட பல்வேறு அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்டதோடு, இது தனிமைப்படுத்தப்பட்ட வேலைகளுக்கு வழிவகுத்துள்ளது என குழு கருதுகிறது.இதன்மூலம் நவீன மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துடன் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட தொழில் முயற்சிகள் விவசாயத்தை ஊக்கம் இழக்கச் செய்துள்ளது. எனவே, ஏற்றுமதி நோக்குநிலையுடன் மிகவும் ஒருங்கிணைந்த, நன்கு ஒருங்கிணைப்புடன் கூடிய தொழில் முயற்சி விவசாயத்திற்கான விவசாயம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரச நிறுவனங்களை ஒரு குடையின் கீழ் கொண்டுவர குழு பரிந்துரைக்கிறது.

14. கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்படுவதற்கு மிகவும் புத்தியுள்ள மற்றும் நட்புடன் கூடிய சீர்திருத்தமாக இருக்கக் கூடிய, மண் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் உரங்களை விநியோகிப்பதற்கான பொறிமுறையொன்றை குறைந்தபட்சம் மாவட்ட அளவிலாவது தொடங்கி பின்தொடருமாறு குழு பரிந்துரைக்கிறது. மண் பரிசோதனை சேவைகளை வழங்கும் போது தனியார் துறையின் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில் விதிமுறைகளை உருவாக்கவும் குழு பரிந்துரைக்கிறது. உர மானியத் திட்டம் பயனுறுதி மிக்கதாக நெறிப்படுத்த முடியும் என்பதால், உண்மையான உரத் தேவையின் துல்லியமான முன்னறிவிப்புடன் இந்த செயல்முறை தொடர வேண்டும். அதற்கு முன், மண் பரிசோதனை கூடங்களில் போதிய வசதிகள் இல்லாதது மற்றும் தாமதங்கள் காரணமாக மண் பரிசோதனை அட்டைகளை விநியோகிப்பதில் உள்ள மோசமான பயனுறுதி குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.

செல்வி அயந்தி த சில்வா
பணிப்பாளர் நாயகம் , ..........................
கருத்திட்ட முகாமைத்துவம் தலைவர்
மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்

பேராசிரியர் புத்தி மாரபே
சிரேஷ்ட பேராசிரியர், விவசாயத்துறை பீடம், உறுப்பினர்
பேராதனைப் பல்கலைக்கழகம் .............................................

செல்வி. கே.ஜீ.டீ.என். ஜயசிங்க
பிரதான கணக்காளர் உறுப்பினர்
விவசாய அமைச்சு .............................................

திரு. ரஞ்சித் பேஜ்
பிரதித் தலைவர் / குழுவின் பிரதான நிறைவேற்று அதிகாரி உறுப்பினர்
காகில்ஸ் ( லங்கா) பிஎல்சீ ..............................................

திரு. பீ.ஜீ. ஷமிந்த
பணிப்பாளர் உறுப்பினர்
லும்பிணி தேயிலைத் தொழிற்சாலை .....................................

கலாநிதி தனுஷ்க பெரேரா
பணிப்பாளர், ..........................................
தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம் - அவை ஏற்பட்டாளர்

**பின்னிணைப்பு 01**

கமத்தொழில் அமைச்சுக்கு நியமிக்கப்பட்ட பொதுச் செலவின மீளாய்வுக் குழுவானது உத்தியோகத்தர்கள், புத்திஜீவிகள், தொழில் முனைவோர் மற்றும் தனியார் துறை பிரநிதிகள் ஆகியோரைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

திருமதி அயன்தி டி சில்வா,
பணிப்பாளர் நாயகம்,
கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வைத் திணைக்களம் – தலைவர்

திருமதி. கே.ஜீ.டிஎன். ஜயசிங்க,
பிரதம கணக்காளர், கமத்தொழில் அமைச்சு – உறுப்பினர்

பேராசிரியர் புத்தி மாரம்பே,
சிரேஷ்ட பேராசிரியர், விவசாயப் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம் – உறுப்பினர்

திரு. ரஞ்சித் பேஜ்,
பிரதித் தலைவர் / குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி,
கார்கில்ஸ் (லங்கா) பீஎல்சீ – உறுப்பினர்

திரு. பீ.ஜே. சமிந்த –
பணிப்பாளர், லும்பினி தேயிலைத் தொழிற்சாலைகள் – உறுப்பினர்

கலாநிதி தனுஷ்க பெரேரா –
பணிப்பாளர், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் – குழு ஏற்பாட்டாளர்

பொதுச் செலவின மீளாய்வுக் குழுவின் நியமனக் கடிதத்தின் மூலம் வழங்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, கமத்தொழில் அமைச்சின் செயலாளரினால் அவர் பங்குபற்றாத சந்தர்ப்பங்களில் பொதுச் செலவின மீளாய்வுக்குழுவை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக அந்த அமைச்சின் பிரதம கணக்காளர் திருமதி.கே.ஜீ.டி.என். ஜயசிங்க அவர்கள் பெயரிடப்பட்டுள்ளார். மேலும், தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் திருமதி. எஸ்.யாப்பா அவர்களும் அழைப்பின் பேரில் குழுவில் பங்கேற்றார்.

**பின்னிணைப்பு 02**

பொதுச் செலவின மீளாய்வுக் குழுவுக்கு ஏற்புடைய விடயங்கள்

i. நிறுவனத்தின் செயற்பணி மற்றும் நோக்கு என்பவற்றை மீளாய்வு செய்து தேவையெனின் அவற்றை மீண்டும் பொருள்கோடல் செய்தல்.

ii. நிரல் அமைச்சின் அனைத்து நிகழ்ச்சித்திட்டங்கள் / கருத்திட்டங்கள் / உப கருத்திட்டங்கள் / செயற்பாடுகள் என்பவற்றை மீளாய்வு செய்து அமைச்சின் குறிக்கோள்கள், செயற்பணி மற்றும் நோக்கு என்பவற்றை அடைந்துகொள்ளும் பொருட்டு அந்த ஒவ்வொரு செயற்பாட்டினாலும் கிடைக்கப்பெற்ற பங்களிப்பு எவ்வாறானது என்பதை அடையாளம் காணல்.

iii. தற்போதுள்ள வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டில் காணப்படும் இரட்டிப்புக்கள், வீண்விரயம் மற்றும் முக்கியமற்ற கருத்திட்டங்கள் அல்லது செலவினங்களை அடையாளம் காணல்.

iv. அமைச்சின் குறிக்கோள்கள் மற்றும் தேசிய கொள்கைகளை அடைந்துகொள்வதில் காணப்படும் உள்ளார்ந்த ஆற்றலுக்கு அமைய அனைத்து நிகழ்ச்சித்திட்டங்கள் / கருத்திட்டங்கள் / உப கருத்திட்டங்களை முன்னுரிமைப்படுத்தல்.

v. ஆகக் குறைந்தது அமைச்சின் / திணைக்களத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் அடிப்படையான கருத்திட்டங்கள் 3 ஐ அடையாளம் காணல்.

vi. அவ்வாறான கருத்திட்டங்களை அவர்களுக்கு கையளிப்பதற்கு நியாயப்படுத்த முடியுமான காரணங்களை கண்டறிதல்.

vii. அடிப்படை செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு வழங்க வேண்டிய ஆளணித் தேவைப்பாடுகள் மற்றும் ஏனைய வசதிகளை அடையாளம் காணல்.

viii. முடியுமெனின், செலவு இயக்கிகள் / அலகுச் செலவு மற்றும் செலவை குறைக்கும் முறையை அடையாளம் காணல்.

ix. செலவு – நன்மை பகுப்பாய்வு மூலம் ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் ஆகக் குறைந்த வளங்களின் தேவைப்பாட்டை அடையாளம் காணல்.

x. இலக்குகளை அடைந்துகொள்ளும் முறையை மதிப்பிடுவதற்காக பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள் (KPIs) அடையாளம் காணல்.

xi. பொருளாதாரத்தை வழமை நிலைக்கு கொண்டுவருவதற்காக செயற்படுத்த முடியுமான மறுசீரமைப்புக்களை (குறுகிய / நடுத்தர / நீண்டகால) அடையாளம் காணல் (உதாரணம் – அரசாங்க – தனியார் கூட்டுடமைக்கு சாத்தியப்பாடுள்ள துறைகள், வியாபார செயன்முறைகளை மீளுருவாக்கம் செய்தல், செலவைக் குறைப்பதற்காக பயனர் கொடுப்பனவு பெறிமுறை)

xii. வேறு விடயங்கள்

## பின்னிணைப்பு 03

### ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைகள்

அனைத்து குழுக் கூட்டங்களின் போதும் எதிர்வரும் கூட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் குறித்து தீர்மானங்கள் எடுக்கப்பட்டதோடு, அதன் மூலம் செயற்பாடுகளை தொடர்ச்சியாகவும் காலத்திற்கேற்ற வகையிலும் மேற்கொள்வதற்கு சட்டகமொன்று தயாரிக்கப்பட்டது.

அதிக எண்ணிக்கையிலான திணைக்களங்கள் / நிறுவனங்கள் கமத்தொழில் அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் வருவதனால் கூட்டங்களை நடத்தும் போதும் தீர்மானங்களை எடுக்கும் போதும் உயர் வினைத்திறனை உறுதிப்படுத்தும் பொருட்டு குழுவினால் அவர்கள் குழுக்களாக அழைக்கப்பட்டனர். புரிந்துணர்வுடன் தீர்மானங்களை எடுப்பதற்காக ஏற்புடைய தகவல்களை அணுகுவதற்கு தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் பல நிறுவனங்களை மீண்டும் அழைப்பதற்கும் குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

தெளிவுபடுத்திக்கொள்வதற்கும் நிறுவனங்களின் பொதுச் செலவினங்கள் பற்றி வழங்கப்பட்டுள்ள தகவல்களின் சிக்கல்தன்மையை தவிர்க்கும் நோக்கிலும் குழுவினால் கமத்தொழில் திணைக்களத்தின் பெறுபேற்று சட்டக வரைவு, அமைச்சரவை முடிவுகள், வெளிநாட்டு நிதியீட்டல் கருத்திட்டங்களின் நிதியுதவிகள், விஞ்ஞாபன குறிப்புகளின் மேலதிக தகவல்கள் என்பன தேவையான விதத்தில் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் கோரப்பட்டன.

குழு உறுப்பினர்களின் மற்றும் பங்கேற்பாளர்களுக்கு எதிர்வரும் கூட்டங்களுக்கு பயனுள்ள விதத்தில் தயாராகும் பொருட்டு கூட்டங்களின் எழுத்துமூலக் குறிப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. குழுவினால் பின்னூட்டல் கூட்டங்களின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களை மீண்டும் பரிசீலனைக்கு உட்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என்பதும் உறுதியளிக்கப்பட்டது.

## பின்னிணைப்பு 03

### மீளாய்வுச் செயன்முறை

பின்வரும் துறைகள் குறித்து கவனம் செலுத்தி குழுவானது தனது மீளாய்வுச் செயன்முறையை தயாரித்துள்ளது.

1) உந்துகை துறைகள் / நோக்கு மற்றும் காணப்படும் தொடர்புகள் (20)
   - அ. குறிக்கோள் மற்றும் எதிர்பார்க்கப்படும் பெறுபேறு
   - ஆ. மிகவும் நேரடியான பயனாளி (சமூகம், இடைத்தரகர், நிறுவனம்)

2) வேறு நிகழ்ச்சித்திட்டங்களுடன் கிடையான / நேர்குத்தான தொடர்புகள் (20)
   - அ. தற்போதுள்ள நிலமைக் காரணமாக எழும்

தேவைப்பாடு
ஆ. உள்ளக ரீதியான
இ. தேசிய / வெளிநாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்

3) நிதியீட்டத்தின் மீதான அழுத்தம் (20)
அ. நிதியீட்டக் கடன் மூலங்கள் / கொடை , உள்நாட்டு நிதி, வரவுசெலவுத்திட்டதிற்கு வெளியே / பங்குடமை
ஆ. இது வரையில் ஏற்பட்ட செலவுகள் மற்றும் பொறுப்புக்கள்
இ. எதிர்கால நிதியீட்டத் தேவைப்பாடுகள் – அவசர, அடுத்த ஆண்டு வரவுசெலவுத்திட்டம், பிற்போட முடியுமான

4) பௌதீக முன்னேற்றம் (20)
அ. வேலை நிறைவுசெய்யப்பட்டுள்ள மட்டம் (இறுதிக் கட்டம், இடைநிலை கட்டம், ஆரம்ப கட்டம், தயாராதல்)
ஆ. இறுதி வெளியீட்டை வழங்குவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்ட காலம் ( மாதம் 1-6, மாதம் 6-12, 12 மாதங்களுக்கு மேல்)

5) கொள்கைத் தீர்மானங்கள் (20)
அ. சட்டம்
ஆ. அமைச்சரவைத் தீர்மானம் /RAMP/NOR
இ. செயற்பாடுகள் / இணைந்த திட்டம்

**பின்னிணைப்பு 05**

| அட்டவணை 1 உர நிகழ்ச்சித்திட்டதிற்கான நிதி ஏற்பாடுகள் | | | |
|---|---|---|---|
| # | **வரவுசெலவுத்திட்ட நிரல், நிதி ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்** | **வரவுசெலவுத்திட்ட நிரலின் குறிக்கோள் மற்றும் முன்னேற்றம்** | **அவதானிப்புக்களும் பரிந்துரைகளும்** |
| **1** | உர மானிய நிகழ்ச்சித்திட்டம். 2023 ஆம் ஆண்டு<br><br>**இ.ரூ.பில். 33 (கமத்தொழில் அமைச்சு)** | இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் வருடாந்தம் வயல் காணி 5 ஏக்கரை விடக் குறைவாக உள்ள விவசாயிகள் 1.2 மில்லியன் பேருக்கு உர மானியம் வழங்கப்படும்.<br><br>• மானியச் செலவு – இ.ரூ.பில். 26<br>• செயற்பாட்டுச் செலவு – இ.ரூ.பில் 7 | உர மானிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையில் ஐந்தில் ஒரு பகுதி (21%) அதன் செயற்பாட்டு மற்றும் விநியோகச் செலவுகளுக்காக செலவிடப்படுகின்றது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட வவுச்சர்/ பணம் வழங்கும் முறையின் மூலம் செயற்பாட்டுச் செலவுக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் குறிப்பிடத்தக்க அளவு தொகையை வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தில் இருந்து சேமிக்க முடியும் என பொதுச் செலவின மீளாய்வுக் குழுவினால் அவதானிக்கப்பட்டது. மேலும், செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பு செலவுகளுக்காக ஒதுக்கப்பட்ட 5,000 மில்லியன் ரூபா தொகையை சேமிக்குமாறு குழு பரிந்துரைக்கின்றது. |

| | | | |
|---|---|---|---|
| **2** | உர நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான பொறுப்புக்கள்.<br><br>**இ.ரூ.பில். 62.7 (கமத்தொழில் அமைச்சு)** | • பொறுப்புக்கள் – இ.ரூ.பில். 43.6<br>• கடன் மற்றும் வட்டி – இ.ரூ.பில். 19.1 | உர மானியக் கொடுப்பனவுகள் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக இந்த நீண்டகாலப் பொறுப்பு மற்றும் கடந்த வருட பட்டியல்களுக்கான கொடுப்பனவுகள் தனித்தனியாக வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டில் காட்டப்பட வேண்டுமென பொதுச் செலவின மீளாய்வுக் குழு அவதானிப்புச் செய்கின்றது. |

| | | | |
|---|---|---|---|
| **3** | உரப் பரிசோதனை ஆய்வுகூடத்தை மேம்படுத்தல்<br>**இ.ரூ.மில். 09**<br>**(**இலங்கை உரக் கம்பனி**)** | இலங்கை உரக் கம்பனியின் உரப் பரிசோதனை ஆய்வுகூடத்தில் அத்தியவசிய புதுப்பித்தல் நடவடிக்கைக்காக.<br>• செலுத்தப்பட்ட தொகை - **இ.ரூ.மில். 5**<br>• பொறுப்பு - **இ.ரூ.மில்.** 11 | இலங்கை உரக் கம்பனியினால் ஈட்டப்படும் நிதியில் இருந்து ஆய்வுகூட வசதிகளை பராமரிக்க முடியும் என்பதால் இந்த ஒதுக்கீடுகளை தொடர்ந்து செய்ய வேண்டிய அவசியமில்லை என பொதுச் செலவின மீளாய்வுக் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.<br>எனவே, 2024 ஆம் ஆண்டிற்கு இந்த ஏற்பாடு அவசியப்படாது. |
| **4** | உரக் களஞ்சியசாலைகளை நிர்மாணித்தல்<br><br>**இ.ரூ.மில். 300**<br>(கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம்) | தற்போதுள்ள களஞ்சியசாலைகள் போதுமானதாக இல்லாத காரணத்தினால், உரங்களை சேமிப்பதற்காக 19 பகுதிகளில் 38 கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு. | கட்டாயப் பணிகள் மற்றும் அரசாங்க உர விநியோக உத்தியில் அறிவிக்கப்பட்ட மாற்றங்களைக் கருத்தில் கொண்ட பிறகு**,** 2024 ஆம் ஆண்டில் இதற்கான அவசியம் ஏற்படமாட்டாது. |

**அட்டவணை 2 – பாரிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள்**

| # | **வரவுசெலவுத்திட்ட நிரலின் குறிக்கோள் மற்றும் செலவினம்** | **வரவுசெலவுத்திட்ட நிரலின் குறிக்கோள் மற்றும் முன்னேற்றம்** | **அவதானிப்புக்களும் பரிந்துரைகளும்** |
|---|---|---|---|
| **5** | விவசாயத் துறையில் நவீனமயமாக்கல் கருத்திட்டம்<br><br>*உற்பத்தித்திறன் மற்றும் உற்பத்தியை அதிகரித்தல், உற்பத்தி மற்றும் சந்தை போட்டித்தன்மையை பன்மைத்துவப்படுத்தல்*<br><br>**இ.ரூ.மில். 16,685** | • 12 மாவட்டங்களில் நவீனமயமாக்கப்பட்ட அறுவடை தொழில்நுட்பப் பூங்காக்கள் 42 ஐ அபிவிருத்திச் செய்தல் (67%)<br>• உற்பத்தி மற்றும் சந்தை உட்கட்டமைப்பு அபிவிருத்தி (44%)<br>• 22 சிறிய குளங்கள் (100%), விவசாயக் கிணறுகள் 148 (14.8%), 22 சிறிய அளவிலான கால்வாய்கள் புனரமைப்பு (82%).<br>• உலக வங்கிக் கூறு: 55% ஐரோப்பிய ஒன்றியக் கூறு: 20% | கருத்திட்ட அமலாக்கத்தில் நீடித்த தாமதம் காரணமாக, முதலில் திட்டமிட்டபடி சமூகத்திற்கு எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கவில்லை. மேலும் நீடிப்பு இன்றி 2024 ஆம் ஆண்டில் புதிய காலப் பகுதிக்குள் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு மூலோபாய தலையீடுகள் செய்யப்படல் வேண்டும் என குழு கடுமையாக பரிந்துரைக்கின்றது. |

| | | | |
|---|---|---|---|
| **6** | **சிறு தேயிலைத் தோட்ட** | 57,500 4 பேர்ச்சசைஅபிவிருத்தி செய்தல்**.** | தற்போதைய செயற்பாட்டு நோக்கங்கள் மூல நோக்கங்களிலிருந்து |

| | | | |
|---|---|---|---|
| | **உரிமையாளர்களின் விவசாய பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்**<br><br>*சிறு விவசாயிகளுக்கு சந்தை மற்றும் நிதியீட்டத்தில் பிரவேசிக்கும் ஆற்றலை விருத்திசெய்தல்.*<br><br>**இ.ரூ.மில். 17,171** | வணிகப் பங்குடமை (**64%)**<br><br>விவசாயிகள் மற்றும் ஊக்குவிப்பாளர்கள் 36,870 பேருக்கு நுன்கடன் வசதிகளை வழங்குதல். (50%)<br><br>• ஒட்டுமொத்த முன்னேற்றம் : 57% | வேறுபடுகின்றன. மேலும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் கடந்த 6 ஆண்டுகளில் திட்டமிடப்பட்ட இலக்குகளிலிருந்து பெரிதும் விலகிவிட்டன. இத்தகைய சூழ்நிலையால் சமூகத்திற்கு நலன்களை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எனவே, 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் கருத்திட்டத்தை மேலும் நீட்டிக்காமல் நிறைவு செய்வதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படல் வேண்டுமென குழு கடுமையாக பரிந்துரைக்கின்றது. மேலும் தாமதம் ஏற்படுமானால் அது அரசாங்கத்துக்கு அதிகமான நிதி இழப்பை ஏற்படுத்தும்.<br><br>எனவே, கருத்திட்டத்தைச் செயற்படுத்தக்கூடிய முறையான வேலைத் திட்டத்துடன் செயற்படுத்தப்படல் வேண்டுமென்றும் அதன் வெற்றிகரமான பராமரிப்பிற்காக பயனுள்ள மற்றும் கிட்டிய மேற்பார்வை பொறிமுறையை உருவாக்குதல் வேண்டுமென்றும் குழு கடுமையாக பரிந்துரைக்கின்றது. |
| **7** | **காலநிலை சூட்டிகை நீர்பாசன விவசாயக் கருத்திட்டம்**<br><br>**இ.ரூ.மில். 18,800** | திறப்பனை காலநிலைக்கு ஏற்ற விவசாயப் பண்ணையில் வெளிக்களப் பாடசாலையை நிறுவுதல் (100%)<br>47 கமநல சேவை நிலையங்களின் நவீனமயமாக்கல் (100%)<br>487 சிறிய குளங்களின் மறுசீரமைப்பு (52%)<br>66,096 வீட்டுத் தோட்டங்களை நிறுவுதல் (100%)<br>1,260 விவசாயக் கிணறுகளின் மறுசீரமைப்பு (68%)<br>20 தானியக் களஞ்சியங்களை நிர்மாணித்தல் (55%)<br>• ஒட்டுமொத்த முன்னேற்றம்: 58% | கருத்திட்டத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்ட இலக்குகளை அடைய முடியாமல் போன காரணத்தினால் அடையக்கூடிய இலக்குகளுடன் கருத்திட்டத்தின் விடயப் பரப்பைக் குறைத்து**,** கடன் நிதியை மறுநோக்கம் செய்ய முடிவு செய்யப்பட்டது.<br>எனவே**,** பயனுள்ள மற்றும் கிட்டிய மேற்பார்வை பொறிமுறையுடன் விடயப் பரப்பு குறைக்கப்பட்ட திட்டத்திற்குள் கருத்திட்டத்தை செயல்படுத்துமாறு குழு பரிந்துரைக்கின்றது. |

| | | | |
|---|---|---|---|
| **8** | **சிறு தோட்ட உரிமையாளர்களின் விவசாயத் தொழில் முயற்சிகளுக்கு ஈடுகொடுக்கும் ஆற்றலை வலுப்படுத்தும் கருத்திட்டம்**<br><br>**இ.ரூ.மில். 14,760** | ஆறு மாவட்டங்களில் காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ள 40,000 கிராமப்புற சிறு தோட்ட உடமையாளர்களின் குடும்பங்களின் ஈடுகொடுக்கும் ஆற்றல் மற்றும் சந்தைப் பங்கேற்பை கட்டியெழுப்புதல்.<br><br>260 நீர்த்தேக்கங்களின் மறுசீரமைப்பு<br><br>30 கமநல சேவை நிலையங்களை நவீனமயமாக்கல்<br>• ஒட்டுமொத்த முன்னேற்றம்: 2.4% | இந்தக் கருத்திட்டங்கள், காலநிலையைத் தாங்கும் தன்மையை மேம்படுத்தல் எனும் கமத்தொழில் அமைச்சின் நோக்கத்துடன் மிகவும் இணங்குகின்றன.<br><br>ஏனைய கருத்திட்டங்கள் மூலம் அவதானிக்கப்பட்ட பாதகமான விளைவுகளைக் கருத்திற்கொண்டு இந்தக் கருத்திட்டத்தை உரிய காலத்தில் நிறைவு செய்ய வேண்டியதன் அவசியம் குழுவினால் அவதானிப்புச் செய்யப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| **9** | சிறு அளவிலான பால் உற்பத்தி கூட்டுறவு சங்கங்களின் அபிவிருத்தி<br><br>**இ.ரூ.மில். 3,600** | 3 கூட்டுறவு சங்கங்களுக்கு மூன்று சிறிய அளவிலான பால் பதப்படுத்தும் ஆலைகளை நிர்மாணித்தல் (97%)<br><br>இக்கருத்திட்டம் மூலம் மூன்று தனிப்பட்ட தொழில்முனைவோருக்கு மூன்று சிறிய அளவிலான பால் பதப்படுத்தும் ஆலைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. (96%)<br><br>• ஒட்டுமொத்த முன்னேற்றம்: 70 % | இந்தக் கருத்திட்டம் மதிப்புச் சங்கிலி , சந்தைப்படுத்தல் மற்றும் தொழில் முனைவோர் அபிவிருத்தி பற்றிய கமத்தொழில் அமைச்சின் ஒட்டுமொத்த நோக்கத்துடன் நன்கு இணைந்துள்ளது.<br>எவ்வாறெனினும், இக்கருத்திட்டம் ஒப்புக் கொள்ளப்பட்டபடி மூல கருத்திட்டக் காலத்திற்குள் நிறைவு செய்யப்படவில்லை என்பதை குழு அவதானிப்புச் செய்துள்ளது. அதனை நிறைவு செய்ய மேலும் 02 வருட காலம் நீடிக்கப்பட்டுள்ளது.<br><br>எனவே, புதிய காலக்கெடுவுக்குள் கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு ஒரு முன்மொழிவை சமர்ப்பிக்குமாறு குழுவால் கடுமையாக பரிந்துரைக்கப்படுகின்றது. |

**அட்டவணை 3 விதை உற்பத்தி மற்றும் தாவரப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்**

| # | வரவுசெலவுத்திட்ட நிரல் மற்றும் செலவினம் | குறிக்கோள் மற்றும் முன்னேற்றம் | அவதானிப்புக்களும் பரிந்துரைகளும் |
|---|---|---|---|
| **10** | விதை உத்தரவாதப்படுத்தல் மற்றும் தாவரப் பாதுகாப்பு<br><br>**இ.ரூ.மில். 2,000 (விவசாயத் திணைக்களம்)** | விவசாயிகளிடம் விதை நெல் கொள்வனவு<br><br>உத்தரவாதப்படுத்தி பல மடங்கில் விநியோகிப்பதற்காக பண்ணைகளிலிருந்தும் ஒப்பந்த விவசாயிகள் மூலமும் தரமான விதைகளை உற்பத்தி செய்தல்<br><br>ஏனைய உணவுப் பயிர்களை | விவசாயத் திணைக்களத்தின் இணக்கத்துடன், விதை உற்பத்திக் கருத்திட்டத்தின் திட்டமிட்ட நோக்கங்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் 500 மில்லியன் ரூபாவைக் குறைக்குமாறு குழு பரிந்துரைக்கின்றது.<br><br>இந்த முதலீட்டில் இருந்து கிடைக்கும் நலன்கள் குறித்த அறிக்கையை விவசாயத் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தோடு, 2024 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடுகளை செய்வதற்கு முன்னர் |

| | | | |
|---|---|---|---|
| | | உத்தரவாதப்படுத்தல்<br><br>ஒட்டுமொத்த முன்னேற்றம்: 70 | பொதுச் செலவின மீளாய்வுக் குழுவால் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |

**அட்டவணை 4 – உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்**

| # | வரவுசெலவுத்திட்ட நிரல், குறிக்கோள் மற்றும் செலவினம் | வரவுசெலவுத்திட்ட நிரலின் குறிக்கோள் மற்றும் முன்னேற்றம் | அவதானிப்புக்களும் பரிந்துரைகளும் |
|---|---|---|---|
| **11** | விசேட உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம்<br><br>இ.ரூ.மில். 900<br>**(கமத்தொழில் அமைச்சு)** | 2,500 ஏக்கரில் விவசாயப் பயிர்களை பயிரிடுவதற்கு 6,000 பயனாளிகளுக்கு பயிற்சி, நடவு பொருட்கள், விதைகள் மற்றும் உபகரணங்களை வழங்குதல்.<br><br>4,600 ஏக்கரில் சோளக உற்பத்தி மற்றும் உற்பத்தியை மேம்படுத்த 2,500 விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்குதல்.<br><br>தொழில்நுட்ப உபகரணங்களுடன் கூடிய 239 பாதுகாக்கப்பட்ட பயிர் மனைகள் மற்றும் நுண் நீர்பாசன அமைப்புக்களை நிறுவுதல்.<br><br>12 மழை காப்பு அரண்களை நிறுவுதல்<br><br>சிறந்த விவசாய நடைமுறைகளைப் பின்பற்றும் கிராமத்தை நிறுவுதல்.<br><br>553 மண் பரிசோதனை கருவிகளைப் பெற்றுக்கொள்ளல். | கருத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள பெரும்பாலான செயற்பாடுகள் மீண்டும் மீண்டும் வருவதைக் குழு அவதானித்தது. எனினும் அவை மூலதனச் செலவுத் தலைப்பின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.<br><br>பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதில் பயன்படுத்தப்படும் அளவுகோல்கள் மற்றும் பின்பற்றப்படும் நடைமுறைகள் வெளிப்படையானவை அல்ல என்பதையும் குழு அவதானித்துள்ளது.<br><br>எனவே, 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டை பின்வரும் விடயங்களுக்கு உரிய கவனம் செலுத்தி ஒதுக்கீடு செய்தல் வேண்டும் என குழு பரிந்துரைக்கின்றது.<br>- மீண்டுவரும் செலவினத்தின் கீழ் தேவைப்படும் செயற்பாடுகள் மூலதனச் செலவு விடயத்திலிருந்து வேறாக்கப்படல் வேண்டும்.<br>- வருடாந்த வரவுசெலவுத்திட்ட |

| | | | |
|---|---|---|---|
| | | 70 விவசாயிகளுக்கு 70 விவசாயக் கிணறுகளை புனரமைத்தல்.<br><br>மண் ஆய்வுகூடங்கள் 12 ஐ விருத்திசெய்தல்<br><br>ஒட்டுமொத்த முன்னேற்றம் 30% | ஒதுக்கீடுகளை கோருவதற்கு முன்னர் முறையான அனுமதி பெறப்படல் வேண்டும். |
| **12** | சிறு நீர்பாசனத் தொகுதிகள் மற்றும் அதிக வயற் காணிகள்<br><br>இ.ரூ.மில். 3,000<br>**(**கமநல அபிவிருத்தி திணைக்களம்**)** | அதிக வயல் காணியில் பயிரிடுதல், பரசூட் முறையைப் பயன்படுத்தி உற்பத்தியை மேம்படுத்துதல், காலநிலை மாற்றத்திற்கு தாக்குப் பிடிக்கும் தன்மையை அதிகரிப்பதற்காக சிறு நீர்ப்பாசனத்தில் பிரதான பழுதுபார்ப்புக்களையும் சிறிய குளங்களில் சிறு பழுதுபார்ப்புக்களையும் மேற்கொள்ளல்.<br><br>• ஒட்டுமொத்த முன்னேற்றம் : 20% | தேசிய அளவிலான உணவுப் பாதுகாப்பு அடையப்படும். இந்தச் செயற்பாட்டின் தாக்கத்தைக் கருத்தில் கொண்டு, சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் பிற விளைவுகளைக் கருத்தில் கொண்டு இந்தக் கருத்திட்டத்திற்கு வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் செய்யப்பட வேண்டுமென குழு பரிந்துரைக்கின்றது. |
| **13** | மேலதிகப் பயிர்ளைப் பயிரிடும் நிகழ்ச்சித்திட்டம் பயிர் உற்பத்தி<br><br>இ.ரூ.மில். 100<br>**(கமத்தொழில் அமைச்சு)** | 15 மாவட்டங்களில் 7,000 ஏக்கரில் 15,500 விவசாயக் குடும்பங்களுக்கு தானியப் பயிர்கள்; பயறு, கவுபி, உளுந்து போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கான விதைகளை அந்தந்த மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்கள் (அரசாங்க அதிபர்) மூலம் வழங்குதல்.<br><br>**பௌதீக முன்னேற்றம் : 50%**<br>• விவசாயக் குடும்பங்களுக்கு விதைகளை வழங்குதல் : 30%<br>• உள்ளடங்கும் பிரதேசம் : 32% | நிதி ஏற்பாட்டை ஒதுக்குவதற்கு பரிந்துரைக்கும் அதே நேரம் 2024 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு முன்னர் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயளாளிகள் தெரிவுசெய்யப்பம் அளவுகோல்கள் மற்றும் நடவடிக்கை முறை உட்பட பயனாளிகளின் எண்ணிக்கை**,** பயிரிடப்படும் பரப்பு மற்றும் உற்பத்தி பற்றிய அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு குழு கடுமையாக பரிந்துரைக்கின்றது. |

| | | | |
|---|---|---|---|
| **14** | விவசாயக் கைத்தொழிற் துறையில் இளைஞர்களை தக்க வைத்துக்கொள்ளல் மற்றும் இளைய சமுதாயத்தினரை விவசாயத்துறையின் பிரதான நீரோட்டத்தில் இணைத்தல்.<br><br>இ.ரூ.மில். 120<br>**(கமத்தொழில் அமைச்சு)** | 5 மாவட்டங்களில் இளைஞர் விவசாய-தொழில் முனைவோர் கிராமங்களை ஆரம்பித்தல்.<br><br>விவசாய இயந்திரங்கள், பயிற்சி மற்றும் விழிப்புணர்வு, கால்நடைகள், நடவுப் பொருட்கள் மற்றும் விதைகள், அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பம் மற்றும் அறிவை வழங்குதல்.<br><br>சிறு நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் அமைப்புகள், விவசாயப் பாதைகள் போன்றவற்றை மறுசீரமைத்தல்.<br><br>• கருத்திட்டம் தற்போது செயற்படுத்துவதற்கான ஆரம்ப கட்டத்தில் உள்ளது.<br><br>**பௌதீக முன்னேற்றம்: 60%** | குழுவினால் நிகழ்ச்சியின் உள்ளடக்கத்திற்கு கவனம் செலுத்தப்பட்டதுடன், பூர்வாங்க பணிகள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது. எனவே, 2023 ஆம் ஆண்டின் இறுதியில் அடையப்பெறும் முன்னேற்றத்தின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடுகளை செய்வதற்கு குழு பரிந்துரைக்கின்றது. |

| அட்டவணை 5. கால்நடை வளங்கள் மற்றும் பால் உற்பத்தி அபிவிருத்தி | | | |
|---|---|---|---|
| # | **வரவுசெலவுத்திட்ட நிரல், குறிக்கோள் மற்றும் செலவினம்** | **வரவுசெலவுத்திட்ட நிரலின் குறிக்கோள் மற்றும் முன்னேற்றம்** | **அவதானிப்புக்களும் பரிந்துரைகளும்** |
| **15** | திரவப் பால் நுகர்வுக்கான வசதிகளை வழங்குதல் மற்றும் ஊக்குவித்தல்<br><br>இ.ரூ.மில். 25<br>**(கமத்தொழில் அமைச்சு)** | பாடசாலை மாணவர்களிடையே திரவப் பால் நுகர்வை ஊக்குவித்தல்.<br>(குறிப்பு: தயாரிப்பு இல்லாத காரணத்தினால் இந்த நிகழ்ச்சித்திட்டம் 2023 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படாதென குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, ஒதுக்கப்பட்ட நிதி 2022 ஆம் ஆண்டின் பொறுப்புகளை நிறைவேற்றப் பயன்படுத்தப்பட்டது). | ஏனைய பங்குதாரர்களுடன் இணைந்து ஊட்டச்சத்து பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, 2024 ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகளை செய்வதற்கு முன்னர் செயல் திட்டமொனறைத் தயாரிக்குமாறு குழு பரிந்துரைக்கின்றது. |
| **16** | கால்நடைகளை இனப்பெருக்கம் செய்யும் நிகழ்ச்சித்திட்டம்<br><br>இ.ரூ.மில். 200<br>(**கால்நடை உற்பத்தி மற்றம் சுகாதாரத் திணைக்களம்)** | விசேடமாக இறக்குமதி மூலம் மருந்துகள், தடுப்பூசிகள், விந்து போன்ற தேவையான உள்ளீடுகளை வழங்குவதன் மூலம் மரபணு ரீதியாக மேம்படுத்தப்பட்ட கால்நடைகளை விருத்திசெய்தல்.<br><br>• முன்னேற்றம் : 40 % | செயற்கை கருவூட்டல் (AI) கருத்திட்டத்தின் வெற்றி கிட்டத்தட்ட 40% என குழுவுக்கு அறிவிக்கப்பட்டது.<br><br>இந்தக் கருத்திட்டத்தை மிகவும் பயனுள்ளதாக மாற்றுவதற்கு எதிர்காலத்தில் செயற்கைக் கருவூட்டல் பணிகளில் தனியார் துறையுடன் இணைந்து கூட்டு முயற்சியில் ஈடுபடுவது பொருத்தமென பொதுச் செலவின மீளாய்வுக் குழுவினால் பரிந்துரைக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| **17** | குண்டசாலை செயற்கை கருவூட்டல் இனப்பெருக்க நிலையத்தில் மேம்படுத்தப்பட்ட இனப்பெருக்க உற்பத்தி மூலம் திரவப் பால் உற்பத்தியை அதிகரித்தல்.<br><br>இ.ரூ.மில். 100 (வரவுசெலவுத்திட்ட முன்மொழிவு) (**கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்)** | விந்து உற்பத்திக்காக காளை மாடுகளை இறக்குமதி செய்தல்.<br><br>செலவினம் கிட்டத்தட் 70% அதிகரித்துள்ளதால் இந்த நிகழ்ச்சித்திட்டம் இன்னும் ஆரம்ப கொள்முதல் மட்டத்தில் உள்ளது.<br><br>• **ஒட்டுமொத்த முன்னேற்றம் :** 10% | போதிய ஒதுக்கீடுகள் இன்மையால் இந்த வரவுசெலவுத்திட்ட முன்மொழிவை நடைமுறைப்படுத்துவது கொள்முதல் மட்டத்தில் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.<br><br>எனவே, இந்தப் பணிக்காக இந்த ஆண்டு (2023) நடைமுறைப்படுத்தப்படாத "கால்நடை இனப்பெருக்கப் பண்ணை நிகழ்ச்சித்திட்டத்திற்கு" (வகை. இல. 16) ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளிலிருந்தும் எஞ்சிய ஒதுக்கீடுகளை "கால்நடை இனப்பெருக்க நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து" (வகை. இல. 18) மூலம் பெற்றுக்கொள்ளுமாறு குழு பரிந்துரைக்கின்றது. |

| | | | |
|---|---|---|---|
| **18** | **கால்நடை இனப்பெருக்க பண்ணையை நிறுவுதல்**<br><br>இ.ரூ.மில். 50.<br>**(கமத்தொழில் அமைச்சு)** | இனப்பெருக்க வசதிகளை அணுகுவதற்கான சந்தர்ப்பத்தை அதிகரித்தல்.<br><br>**பௌதீக முன்னேற்றம்**: 30% | 2022 ஆம் ஆண்டில், பொறுப்புகளைத் தீர்ப்பதற்கு ரூ. 15 மில்லியன் தேவைப்படும் என குழு குறிப்பிடுகின்றது.<br><br>எனவே, அந்தத் தொகையை செலுத்துமாறும் எஞ்சிய நிதி ஒதுக்கீட்டை கருவூட்டல் செயற்பாட்டில் (வகை இல. 17) உள்ள இடைவெளியை நிவர்த்தி செய்வதற்கான நிதியீட்டத்திற்கு குண்டசாலை இனப்பெருக்க நிலையத்திற்கு மாற்றும் படியும் குழு பரிந்துரைக்கின்றது. |

| | | | |
|---|---|---|---|
| **19** | சிறு மற்றும் நடுத்தர கால்நடை வள அபிவிருத்தி<br><br>இ.ரூ.மில். 225<br>**(கமத்தொழில் அமைச்சு)** | 50:50 விவசாயி: அரசின் பயனாளிகளினது பங்களிப்பின் அடிப்படையில் பின்வரும் துறைகளின் கீழ் கால்நடை மேம்பாட்டிற்காக விவசாயிகளுக்கு நிதியல்லாத உதவிகளை (பன்றிகள், கோழிக் குஞ்சுகள், எருமைகள் மற்றும் பயிற்சி போன்றவற்றை) வழங்குதல்.<br>• **பௌதீக முன்னேற்றம்**: 20% | ஒட்டுமொத்த ஒதுக்கீட்டில் 60% ஐ முன்னைய ஆண்டுக்கு (2022) ஏற்புடையதாக செலுத்த வேண்டியுள்ள பொறுப்புக்களை உள்ளடக்கியுள்ளதாக குழுவினால் அவதானிக்கப்பட்டது.<br><br>எதிர்காலத் திட்டத்தின் அடிப்படையில், பருத்தித்துறை நிர்மாணப் பணிகளைப் பிற்போட்டு 2023 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டில் இருந்து அப்பணிக்காக ரூ.மில். 25 ஐ குறைப்பதற்கு குழு பரிந்துரைக்கின்றது. |
| **20** | ஆடு வளர்ப்பு<br><br>இ.ரூ.மில். 150<br>**(கமத்தொழில் அமைச்சு)** | 19 மாவட்டங்களில் தெரிவுசெய்யப்பட்ட விவசாயக் குடும்பங்கள் 1,921 க்கு ஆடுகளை வழங்குதல்.<br><br>• ஒட்டுமொத்த முன்னேற்றம் : 100% | இந்தக் கருத்திட்டத்திற்கு ஒரு சிறந்த திட்டம் தேவைப்படுவதனால் 2023 ஆம் ஆண்டில் முன்னோடித் திட்டமொன்றை ஆரம்பித்து அதன் வெற்றியின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டில் அதனை விரிவுபடுத்துவதற்கு குழு பரிந்துரைக்கின்றது. |
| **21** | பாதங்கள் மற்றும் வாய் நோய்களுக்கு உள்நாட்டில் தடுப்பூசிகளை உற்பத்தி செய்தல்.<br><br>இ.ரூ.மில். 126.5<br>(**கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்)** | பாதங்கள் மற்றும் வாய் நோய்களுக்கு எதிராக உள்நாட்டு தடுப்பூசிகளை உற்பத்தி செய்வதை (ஒரு வருடத்திற்கு 500,000) அதிகரித்தல்.<br><br>ஒட்டுமொத்த முன்னேற்றம் :30 % (க.கொ. இந்த ஒதுக்கீட்டுக்கு கொள்முதல் செய்யப்பட்ட இயந்திரமொன்றின் ரூ.மில். 56.5 விலைப் பட்டியல் கொடுப்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளது.)<br>**பௌதீக முன்னேற்றம்** : 50% | மேற்படி கொள்முதல் செய்யப்பட்ட இயந்திரத்திற்கான பட்டியல் தொகை ஏற்கனவே 2022 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.<br><br>எனவே, 2023 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டில் ரூ.மில். 56.5 தொகையைக் குறைத்து நிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுக்க வேண்டுமென குழு பரிந்துரைக்கின்றது.<br><br>2024 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடு முறையான நியாயத்துடன் உண்மையான தேவையின் |

| | | | |
|---|---|---|---|
| | | | அடிப்படையில் ஒதுக்கப்பட வேண்டுமெனவும் குழு பரிந்துரைக்கின்றது. |

| | | | |
|---|---|---|---|
| **22** | உயர் தர பசுக் கன்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான சாத்தியப்பாடு<br><br>இ.ரூ.மில். 71<br>(**கால்நடை உற்பத்தி மற்றம் சுகாதாரத் திணைக்களம்)** | சிறிய பண்ணைகளில் தெரிவுசெய்யப்பட்ட பசுக் கன்றுகளுக்கு கருவுறுதலை அதிகரிப்பதற்கும் அதிக பால் உற்பத்தியை உறுதி செய்யவும் 3 மாதங்களுக்கு விலங்கு உணவுகளை அளித்தல். (இலக்கிடப்பட்ட விலங்குகளின் எண்ணிக்கை - 7800).<br><br>சிறு விவசாயிகளுக்கு பசுக் கன்றுகளை பராமரிப்பது தொடர்பில் பயிற்சி அளித்தல்.<br><br>• **பௌதீக முன்னேற்றம்**: 40 % | சந்தையில் கால்நடை உணவுகளின் விலை அதிகரித்த காரணத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி இலக்கிடப்பட்ட எண்ணிக்கையிலான பசுக் கன்றுகளுக்கு உணவளிக்க முடியவில்லை என குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.<br>எனவே, 2024 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட நிதித் திட்டத்துடன் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் 'உயர்தர பசுக் கன்றுகளைப் பராமரித்தல்' பற்றிய திட்ட முன்மொழிவை சமர்ப்பிக்க வேண்டும் என குழு பரிந்துரைக்கின்றது.<br>இதனால், 2023 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டில் இருந்து 60 மில்லியன் ரூபாவை குறைக்குமாறு குழு பரிந்துரைக்கிறது.<br>**அதற்கமைய 2023 ஆம் ஆண்டின் ஒதக்கீட்டில் ரூ.மில். 60 ஐ குறைப்பதற்கு குழு பரிந்துரைக்கின்றது.** |

**அட்டவணை 6 . ஓய்வூதியம் மற்றும் காப்புறுதி**

| # | வரவுசெலவுத்திட்ட நிரல், குறிக்கோள் மற்றும் செலவினம் | வரவுசெலவுத்திட்ட நிரலின் குறிக்கோள் மற்றும் முன்னேற்றம் | அவதானிப்புக்களும் பரிந்துரைகளும் |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| **23** | வயதான விவசாயிகளுக்கு பங்களிப்பு ஓய்வுதியம்<br><br>இ.ரூ.மில். 4,750<br>**(**விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை**)** | விவசாயிகள் மற்றம் மீனவர்கள் 172,000 பேருக்கு ஓய்வூதியம் வழங்குதல். | வயதான விவசாயிகள் மற்றும் மீனவர்களின் வருமானப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ஓய்வூதிய திட்டங்களுக்கு தற்போதுள்ள ஒதுக்கீடுகளை தொடர்ந்தும் பேணி வரவேண்டியதன் அவசியம் குழுவினால் அடையாளம் காணப்பட்டது. |
| **24** | விவசாயிகளுக்கு பங்களிப்பு ஓய்வூதிய முறையொன்றை அறிமுகம் செய்தல்<br><br>இ.ரூ.மில். 1,000<br>**(**விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை**)** | அனர்த்த நிலமையின் போது தெரிவுசெய்யப்பட்ட பயிர்களுக்கு இழப்பீட்டை அறவிட்டுக்கொள்வதற்கு நிதியுதவி வழங்குதல்.<br><br>• **முன்னேற்றம் :** 06 பயிர்களுக்கு ஏக்கருக்கு 40,000 ரூபாய் வீதம் 6,806 விவசாயிகளுக்கு காப்புறுதி வழங்கப்பட்டுள்ளது. | பொதுச் செலவின மீளாய்வுக் குழு உத்தேச செயற்பாட்டின் முக்கியத்துவத்தை அடையாளம் கண்டுள்ளது.<br><br>இதற்கு விவசாயிகளின் பங்களிப்பு இல்லாத காரணத்தினால் இத்திட்டத்தை மறுபரிசீலனை செய்யுமாறு குழு பரிந்துரைக்கின்றது. உர மானியத் திட்டத்தில் இணைவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் ஆராய்வதற்கும் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. |

| அட்டவணை 7 . ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | | | |
|---|---|---|---|
| **#** | **வரவுசெலவுத்திட்ட நிரல், குறிக்கோள் மற்றும் செலவினம்** | **வரவுசெலவுத்திட்ட நிரலின் குறிக்கோள் மற்றும் முன்னேற்றம்** | **அவதானிப்புக்களும் பரிந்துரைகளும்** |
| **25** | தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தை (NARP) பல்கலைக்கழகங்களுடன் இணைந்து செயற்படுத்தல்.<br><br>இ.ரூ.மில். 20<br>**(கமத்தொழில் அமைச்சு)** | கமத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களுடன் இணைந்து விவசாய மேம்பாட்டுத் துறையில் ஆராய்ச்சி மேற்கொள்வதற்காக பல்கலைக்கழகங்களுக்கு ஆராய்ச்சிக்கான ஏற்பாடுகளை வழங்குதல்.<br>முன்னேற்றம்:<br>• திட்டமிடப்பட்ட ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை: 10<br>• ஜூன் மாதம் வரை நிறைவுசெய்யப்பட்ட எண்ணிக்கை: 2<br>• தற்போது செயற்பாட்டில் உள்ள எண்ணிக்கை : 8<br>• இதுவரை நிதியின் பயன்பாடு: இ.ரூ.மில். 5.123. | **2024 வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகளைஒதுக்கீடு செய்வதற்கு முன்னர், ஆராய்ச்சிகள் மூலம் அடையாளம் காணப்பட்ட விடயங்களின் அடிப்படையில் கொள்கை உருவாக்கம் மற்றும் மூலோபாய மேம்பாட்டின் போது அவற்றின் பொருத்தப்பாட்டை மீளாய்வு செய்ய வேண்டுமென குழு பரிந்துரைக்கின்றது.** |
| **26** | ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் (HARTI)<br><br>இ.ரூ.மில். 25<br>**(கமத்தொழில் அமைச்சு)** | ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகளைப் பொறுப் பேற்றல்.40<br>**ஆராய்சியின் முன்னேற்றம்:**<br>திட்டமிடப்பட்ட ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை: 10<br>• ஜூன் மாதம் வரை நிறைவுசெய்யப்பட்ட எண்ணிக்கை: 0<br>• தற்போது செயற்பாட்டில் உள்ள எண்ணிக்கை : 10<br>• இதுவரை நிதியின் பயன்பாடு: ரூ.மில். 6.45.<br>• நிதியங்களின் பயன்பாடு : ரூ.மில். 3.5<br>• **பௌதீக முன்னேற்றம்** : 20% | மூலப்பொருள் செலவுகளைக் குறைப்பதற்கும் அனைத்துப் பங்குதாரர்களுக்கும் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளுக்குப் பரந்த அணுகலை வழங்கும் பொருட்டும் ஆராய்ச்சி முடிவுகள் இணைய வழி மூலம் வெளியிடப்பட வேண்டுமென குழு பரிந்துரைக்கின்றது.<br><br>2023 வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டில் இருந்து ரூ.மில். 3 ஐ குறைப்பதற்கு குழு பரிந்துரைக்கின்றது. |

| | | | |
|---|---|---|---|
| **27** | இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைப் பேரவை (SLCARP)<br><br>இ.ரூ.மில். 25<br>**(கமத்தொழில் அமைச்சு)** | உற்பத்தித்திறனை விருத்தி செய்யும் துறையில் ஆராய்ச்சிக்காக நேரடியாக நிதியங்களை வழங்குதல்.<br>முன்னேற்றம் :<br>• திட்டமிடப்பட்ட ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை : 4<br>• ஜூன் மாதம் வரை நிறைவுசெய்யப்பட்ட எண்ணிக்கை: 0<br>• தற்போது செயற்பாட்டில் உள்ள எண்ணிக்கை: 4<br>• இதுவரை நிதியின் பயன்பாடு: 2023 ஆண்டுக்கு இது வரை நிதி கிடைக்கவில்லை. | NARP திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு SLCARP நிறுவனத்தினால் வசதிகளை வழங்குதல் மற்றும் ஒருங்கிணைப்பு செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டுமென குழு அடையாளம் கண்டுள்ளது.<br><br>எனவே, அந்த நோக்கத்திற்காக மாத்திரம் ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்யுமாறும் SLCARP நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நியாயப்படுத்தலின் அடிப்படையிலான 2023 வரவுசெலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் ரூ.மில். 15 ஐ குறைக்குமாறும் குழு பரிந்துரைத்துள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| **28** | அறுவடைக்குப் பின்னரான தேசிய முகாமைத்துவ நிறுவனம்<br><br>இ.ரூ.மில். 30 | அறுவடைக்குப் பின் ஏற்படும் சேதம் தொடர்பான துறைசார் ஆய்வுகளை மேற்கொள்ளல்.<br><br>ஆய்வுகூட உபகரணங்களை கொள்வனவு செய்தல்.<br>முன்னேற்றம் :<br>• திட்டமிடப்பட்ட ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை: 22<br>• ஜூன் மாதம் வரை நிறைவுசெய்யப்பட்ட எண்ணிக்கை : 0<br>• தற்போது செயற்பாட்டில் உள்ள எண்ணிக்கை: 11<br>• இதுவரை நிதியின் பயன்பாடு : 0 | அழிந்துபோகும் சிறு விவசாயப் உற்பத்திப் பொருட்களில் அறுவடைக்குப் பின்னரான சேதங்களைக் குறைப்பதன் முக்கியத்துவம் குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ளது.<br><br>எனவே, 2024 வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டுக்கான அடிப்படையாக 2023 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு பயன்படுத்தப்படும் பயிர் வகையின் அடிப்படையில் அறுவடைக்குப் பின்னரான இழப்புகளின் அளவைக் குறைப்பது குறித்த விரிவான அறிக்கையைப் பெற்றுக்கொள்ளுமாறு பொதுச் செலவின மீளாய்வுக் குழு பரிந்துரைக்கின்றது. |

| | | | |
|---|---|---|---|
| 29 | விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி<br><br>இ.ரூ.மில். 209.5<br>**(விவசாயத் திணைக்களம்)** | • புதிய கலப்பினங்கள் மற்றும் திறந்த / இயற்கையாக மகரந்தச் சேர்க்கை செய்யப்பட்ட உணவுப் பயிர்களை அபிவிருத்தி செய்தல்<br>• உணவுப் பயிர்களுக்கான பசுமைத் தொழில்நுட்ப மேம்பாடுகள் மூலம் காலநிலைக்கு ஈடுகொடுக்கும் ஆற்றலைப் பெற்றுக்கொள்ளல்<br>• உணவுப் பயிர் உற்பத்திக்கான சூழல் நேயம்மிக்க நிலையான தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்தல்<br>• மண் பாதுகாப்புச் சட்டத்தை சிறப்பாக செயற்படுத்தல்<br><br>• NARP திட்டத்தின் கீழ் உள்ள கருத்திட்டங்களை சிறப்பாக செயற்படுத்தல்<br>ஒட்டுமொத்த முன்னேற்றம் : 58% | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் முக்கியத்துவத்தை குழு அடையாளம் கண்டுள்ளதோடு, இதன் பெறுபேறுகள், கொள்கை உருவாக்கத்தின் போதும் அவற்றை செயற்படுத்தும் போதும் இந்தத் துறைக்கு புத்தாக்க தொழில்நுட்பங்களை புகுத்துவதற்கும் மனித வள மேம்பாட்டிற்கும் உதவும். எனவே, குழுவினால் ஒதுக்கீடு பரிந்துரைக்கப்படுகின்றது. எனினும் 2024 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டை நிர்ணயிக்கும் போது 2023 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டின் பெறுபேறுகள் குறித்த முன்னேற்ற அறிக்கையை விவசாயத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்க வேண்டியதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகின்றது. |
| 30 | விவசாய விரிவாக்கம் மற்றும் பயிற்சி, உட்கட்மைப்பு வசதிகள் அபிவிருத்தி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி<br><br>இ.ரூ.மில். 421<br><br>**(விவசாயத் திணைக்களம்)** | விவசாயத் தொழில்நுட்பத்தை விவசாய சமூகத்தினரிடம் பரப்புவதற்கு வசதியளித்தல் மற்றும் உணவுப் பயிர்கள் தொடர்பான சிறந்த அறுவடை முறைகளைக் கடைப்பிடிப்பதற்கு விவசாயிகளுக்கு உதவுதல்.<br>ஒட்டமொத் முன்னேற்றம் : 60% | எனவே, குழுவினால் ஒதுக்கீடு பரிந்துரைக்கப்படுகின்றது. எனினும் 2024 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டை நிர்ணயிக்கும் போது 2023 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டின் பெறுபேறுகள் குறித்த முன்னேற்ற அறிக்கையை விவசாயத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்க வேண்டியதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| 31 | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (கமநலம்)<br><br>இ.ரூ.மில். 50<br>**(விவசாயத் திணைக்களம்)** | சிறு நீர்ப்பாசனத்தின் கீழ் பின்வரும் பகுதிகளில் ஆய்வுகளை மேற்கொள்ளல்.<br>பியானோவின் சாவிகளின் அமைப்பில் வெளிப்புற வான் கதவுகளை திட்டமிடுதல்.<br>அதிக அடர்த்தி கொண்ட பொலித்தீன் பொருட்களைப் | விவசாயத் துறை தொடர்பான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் முக்கியத்துவத்தை அடையாளம் கண்டு, அந்த ஒதுக்கீட்டை அவ்வாறே பேணிய நிலையில் ஆராய்ச்சி முடிவுகள் மற்றும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களின் |

| | | | |
|---|---|---|---|
| | | பயன்படுத்தி நீர்ப்பாசன முகடுகளை (Rip-Rap) அமைத்தல் சென்சர் அடிப்படையிலான நுண் நீர் பாசனம் | அடிப்படையில் 2024 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு குழு பரிந்துரைக்கின்றது. |
| **32** | அறுவடைக்குப் பின்னரான சேதத்தைக் குறைத்தல் மற்றும் களஞ்சிய வசதிகளை விருத்தி செய்தல்<br><br>இ.ரூ.மில். 150<br>**(கமத்தொழில் அமைச்சு)** | அறுவடைக்குப் பின்னரான நட்டத்தைக் குறைத்தல் :<br>- சோளம், நெல், தானிய வகைகள் போன்றவற்றுக்கு பண்ணைகளில் களஞ்சிய வசதிகளை அபிவிருத்தி செய்தல்.<br>- உணவுக் கைத்தொழில் தொடர்பான தொழில்நுட்பத்தைப் பரப்புவதற்கான பயிற்சித் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.<br>- பெறுமதி சேர்க்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட பொருட்களின் உற்பத்தியை அபிவிருத்தி செய்தல் போன்றவை.<br><br>ஒட்டுமொத்த முன்னேற்றம் : 20% | திட்டமிட்டபடி வேலைத்திட்டம் செயற்படுத்தப்படவில்லை என்பது குழுவினால் அவதானிக்கப்பட்டது.<br><br>இது ஒரு வரவுசெலவுத்திட்ட முன்மொழிவு என்பதால் 2023 ஆம் ஆண்டில் நிறைவுசெய்ய வேண்டும் என குழு பரிந்துரைக்கின்றது. |

| அட்டவணை 8 – நிறுவன அபிவிருத்தி | | | |
|---|---|---|---|
| # | வரவுசெலவுத்திட்ட நிரல், குறிக்கோள் மற்றும் செலவினம் | வரவுசெலவுத்திட்ட நிரலின் குறிக்கோள் மற்றும் முன்னேற்றம் | அவதானிப்புக்களும் பரிந்துரைகளும் |
| 33 | நெல் சந்தைப்படுத்தல் சபை<br><br>இ.ரூ.மில். 300 | கடன் மீளச்செலுத்துவதற்கு நிதியுதவி வழங்குதல்<br><br>உணவில் தன்னிறைவு அடைவதற்காக நெற் களஞ்சிய உட்கட்டமைப்புகளை மறுசீரமைத்தல்.<br><br>இதுவரை பௌதீக முன்னேற்றம் இல்லை. | குழு கடன் மீளச்செலுத்தும் கூறுகளுக்கு இணக்கம் தெரிவித்துள்ளதோடு, அவசர தேவைகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட விதத்தில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு உதவும் அதே வேளையில் நெற் களஞ்சிய சீரமைப்பை படிப்படியாக அகற்றுவதற்கும் பரிந்துரைத்தது. மேலும், 2023 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டில் இருந்து ரூ.மில். 100 ஐ குறைத்து நெல் சந்தைப்படுத்தல் சபையினால் வழங்கப்பட்ட களஞ்சிய புதுப்பித்தல்களை படிப்படியாக நிறுத்தும் திட்டத்தின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட வேண்டுமென குழு பரிந்துரைக்கின்றது. |
| 34 | தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை **(NFPB)**<br>**இ.ரூ.மில். 5**<br>**(கமத்தொழில் அமைச்சு)** | தேசிய உணவு ஊக்குவிப்பு சபைக்கு இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நியாயப்படுத்துவதற்கு இயலாமல் போனது<br><br>பௌதீக முன்னேற்றம் : 0% | 2023 ஆம் ஆண்டுக்கான ஒட்டுமொத்த ஒதுக்கீட்டைக் குறைத்து, தேசிய உணவு ஊக்குவிப்பு சபையின் கடமைப்பொறுப்பு தொடர்பான நியாயமான திட்டத்தின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டுக்கான நிதி ஏற்பாட்டை ஒதுக்கீடு செய்யுமாறு குழு பரிந்துரைக்கின்றது. |

| | | | |
|---|---|---|---|
| **35** | தேசிய விவசாய பன்மைப்படுத்தல் மற்றும் குடியிருப்பு அதிகாரசபை - ஹதபிம அதிகாரசபை<br><br>**இ.ரூ.மில். 200**<br>**(கமத்தொழில் அமைச்சு)** | கமத்தொழிலை ஊக்குவிப்பதற்காக மண் பாதுகாப்புக்காக மற்றும் விவசாயிகளுக்கு சந்தை வாய்ப்பை பெற்றுக்கொள்வதற்கு வசதியளித்தல்..<br><br>**பௌதீக முன்னேற்றம்**: 40 % | நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்தொதுக்கப்பட்ட துறைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளதாக குழு அவதானித்தது.<br><br>**வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளை மேற்கொள்ளும் போது 2024 ஆம் ஆண்டில் ஹதபிம அதிகாரசபையின் கட்டாய செயற்பாடுகளுக்கு உயர் முன்னுரிமையை வழங்குமாறு குழு பரிந்துரைக்கின்றது.** |

| | | | |
|---|---|---|---|
| **36** | தேசிய உரச் செயலகத்தின் (NFS) மாவட்ட அலுவலகங்களை இற்றைப்படுத்தல்.<br><br>**இ.ரூ.மில். 20**<br>**(**தேசிய உரச் செயலகம்**)** | • தற்போதுள்ள மாவட்ட அலுவலகங்களை தளபாடங்களுடன் மறுசீரமைத்தல்.<br>• தேசிய உரச் செயலகத்திற்கு தரவுத் தளம் ஒன்றை அபிவிருத்தி செய்தல்.<br>• ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள முகில் களஞ்சிய தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான (cloud-based data system) தரவுத் தளத்தின் மூலம் பட்டியல்களை செலுத்துவதற்கு வசதியளித்தல்.<br><br>**பௌதீக முன்னேற்றம்** : 85% | உரம் வழங்கல் மற்றும் விநியோகம் தொடர்பில் தரவு வலைப்பின்னல் இருத்தல், உரம் தொடர்பில் சரியாக திட்டமிடுவதற்கும் செலவு தொடர்பில் எதிர்வுகூறுவதற்கும் கடுமையான தேவை உள்ளதென குழு அடையாளம் கண்டுள்ளது.<br><br>எதிர்கால உரத் திட்டமிடலில் அந்த முறையைப் பயன்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரைக்கின்றது. 2023 ஆம் ஆண்டில் பட்டியல்களை செலுத்த முடியுமெனில் எதிர்காலத்தில் இந்த ஏற்பாடு தேவைப்படாதென பொதுச் செலவின மீளாய்வுக் குழு அவதானிப்புச் செய்கின்றது. |
| **37** | கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்<br><br>**இ.ரூ.மில். 850**<br>**(**கமநல அபிவிருத்தி திணைக்களம்) | • மாவட்ட அலுவலகங்கள் / கமநல சேவை நிலையங்களை நிர்மாணித்தல்<br>• மாவட்ட அலுவலகங்கள் / பிரதான அலுவலகத்தின் புனர்நிர்மாணம்<br>• கமநல சேவை நிலையங்களை புனரமைத்தல் | புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பது தொடர்பில் அரசாங்கத்தின் கொள்கைகளை பரிசீலனைக்கு எடுத்த பின்னர் இந்தச் செயற்பாடுகள் இரண்டையும் (மாவட்ட அலுவலகங்கள் மற்றும் கமநல சேவை நிலையங்கள்) தாமதப்படுத்துவதன் மூலம் 2023 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் ரூ,மில். 250 ஐ சேமிக்குமாறு குழு |

| | | | |
|---|---|---|---|
| | | • ஒட்டுமொத்த முன்னேற்றம் : 0.35% | பரிந்துரைக்கின்றது. |
| **38** | பொறித் தொகுதி மற்றும் இயந்திர உபகரணங்கள்<br><br>**இ.ரூ.மில். 101**<br>**(**கமநல அபிவிருத்தி திணைக்களம்) | • புதிய உபகரணங்களை கொள்வனவு செய்தல்<br>• தற்போதுள்ள உபகரணங்களை புனரமைத்தல்<br><br>ஒட்டுமொத்த முன்னேற்றம் : 30% | புதிய கொள்முதலை பிற்போட முடியுமென குழு அவதானிப்புச் செய்கின்றது. எனவே, 2023 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் ரூ.மில். 30 ஐ குறைத்து புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளுமாறு குழு பரிந்துரைக்கின்றது. |